பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 13 வெள்ளிக்கிழமை 30.09.2022 கதிர் 327

### இது ரகசியம் அல்ல!

சமய சந்தர்ப்பம் பார்த்து, கணக்காக தமிழ் தேசிய அரசியல் தலைவர்களுக்கு அரசியல் 'செக்' வைத்திருக்கின்றார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையை. ☞2

# அரசைக் கவிழ்க்க ஆர்ப்பாட்டக்காரர்களை தூண்டிய அரசியலவாதிகள் பற்றி விசாரணை

கொழும்பு,செப்.30

அரசாங்கத்தை கவிழ்க்கும் முயற்சிகளில் ஈடுபடுமாறு ஆர்ப்பாட்டக்காரர்களை ஊக்குவித்த சில அரசியல்வாதிகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிவிலகியதன் பின்னர் நாடாளுமன்றத்தை ஆக்கிரமிக்குமாறும் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பைத் தடுக்குமாறும் ஆர்ப்பாட்டக்காரர்களை கேட்டுக்கொண்டவர்கள் சில அரசியல்வாதிகள் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறிப்பிட்ட சில தரப்பினருடன் இந்த அரசியல்வாதிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டமை குறித்து விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் -

உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வாபஸ் பெறலாம் ☞2

# மிக மோசமான இனவாதப் பிரிவு தொல்லியல் திணைக்களம்தான்

## நீதிமன்றில் சுமந்திரன் நேரடிக் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, செப்ரெம்பர் 30

தொல்லியல் திணைக்களம் இந்தநாட்டிலே இருக்கிற மிக மோசமான இனவாதத் திணைக்களம் என்று நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன. எம்.பி. ☞2



## நினைவேந்தலை ஆட்சேபிப்பது அடிப்படை மனித உரிமை மீறல்!

### போதிக்கிறார் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார



நினைவேந்தலுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது அடிப்படை மனித உரிமை மீறலாகும். வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தமிழ் மக்கள் அமைதியாகவே நடத்துகின்றனர். அடிப்படை அரசியல் ☞2

## தமிழர் மத்தியில் கட்சி அரசியல் மேலோங்கி போராட்டத் தியாகங்களைச் சூறையாடுகிறது

### விசனம் தெரிவிக்கின்றார் ஐங்கரநேசன்

திலீபனின் நினைவேந்தலில் ஏற்பட்ட குழப்பங்களும் அதையொட்டிய ஊடகச் சந்திப்புகளும் பேரினவாதிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன என தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். ☞2



## அதிகரித்த போதைப்பாவனை; இன அழிப்பின் தொடர்கதை!

### யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டு

இனம் , மொழி , உரிமை என்று திரண்ட இளைஞர் கூட்டத்தை நயவஞ்சகமாக அழித்தது மட்டுமல்லாது . இனி வரும் எந்தக் காலப்பகுதியிலும் ☞11

## ஆளும், எதிரணிப் பங்கேற்புடன் 'தேசிய சபை' கன்னிக் கூட்டம்!



ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் பங்கேற்புடன் நடைபெற்ற 'தேசிய சபையின்' கன்னிக் கூட்டத்தில் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பான இரண்டு உப குழுக்களை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தேசிய கொள்கைகளை ☞11

## 22 ஆவது திருத்தத்தின் மீது 6 ,7 ஆம் திகதிகளில் விவாதம்

22 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்தை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள நாடாளுமன்ற விவகா ரங்களுக்கான குழுவில் ☞11

## பத்தில் நான்கு குடும்பங்கள் அரைப்பட்டினி நிலையில்!

தீவிரமடைந்து வரும் பொருளாதார நெருக்கடி உணவுப் பாதுகாப்பை தொடர்ந்து அச்சுறுத்தி வருவதாகவும் இலங்கையில் உள்ள பத்தில் நான்கு குடும்பங்கள், போதிய உணவுகளை ☞11

## இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் தளர்கின்றன

இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு உள்நாட்டில் ☞11

# நமது மக்கள் பற்றி எடுத்துரைக்க வரலாறு தரும் எல்லா வாய்ப்புகளையும் நாம் பயன்படுத்துவோம்



## தேசிய சபை கூட்டத்தின் பின் மனோ கணேசன் தெரிவிப்பு

"தமிழ் மக்களை பொறுத்தவரையில் வரலாறு முழுக்க தவற விட்ட வாய்ப்புகள்தான் அதிகம். ஆகவே எந்த ஒரு வாய்ப்பையும் தவற விட இனி நாம் தயார் இல்லை. எமது மக்களின் பிரச்சினைகளை எடுத்து கூற எமக்கு கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் நாம் பயன்படுத்துவோம். அந்த அடிப்படையிலேயே நாம் இங்கே வந்துள்ளோம். ஆனால், இதுவும் கதைக்கள், கதாகாலேட்சபம் என்றால் நாம் விலகி விடுவோம். ஆனால், முன் கூட்டியே முடிவு எடுத்து, இது சரி வராது என எடுத்த எடுப்பிலேயே ☞11

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாளிப்பதற்கு சர்வ கட்சி அரசு அமைக்க முற்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது சரிவராத நிலையில், குறைந்தபட்சமாக சர்வ கட்சிகளும் அடங்கிய 'தேசிய சபை' ஒன்றை நிறுவி, அதன் மூலம் அரசை கண்காணிப்பதன் வாயிலாக அரசுக் கட்டமைப்பில் அனைத்துக் கட்சிகளையும் ஏதோ ஒரு தளத்தில் ஒன்றிணைத்து பங்களிக்க வைக்கலாம் என்று திட்டமிட்டார்.

தேசிய சபையும் அமைக்கப்பட்டது. இதில் பங்குபற்ற மாட்டோம் என்று பிரதான எதிர்க்கட்சியான சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்தது. தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை தேசிய சபையில் பங்கேற்போம் என மிதப்பாக அறிவித்தன.

பிரதான எதிர்க்கட்சிகள் எல்லாம் தேசிய சபையை பரிஷ்கரிக்கலாம் எனச் செய்திகள் வெளியாகின. அப்படித்தான் எல்லோரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் கடைசி நேரத்தில் எல்லா கட்சிகளுமே - பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட - தேசிய சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட எல்லோருமே - போய் அதன் கன்னி அமர்வில் பங்கு பற்றி விட்டார்கள். தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரமுகர்கள்தான் மிஸ்ஸிங்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் இந்தச் சபையைப் புறக்கணிக்கத் தாமும் தமது கூட்டின் பழனி திகாம்பரமும் நேரடியாக கூட்டத்தில் பங்கு பற்றியமை மட்டுமல்லாமல், அதை ஒட்டித் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு செக் வைத்தால் போல கருத்தும் வெளியிட்டு இருக்கின்றார் மனோ கணேசன் எம்.பி. அந்தக் கருத்தின் சுருக்கத்தை பார்க்கலாம்.

"தமிழ் மக்களை பொறுத்தவரையில் வரலாறு முழுக்கத் தவற விட்ட வாய்ப்புகள்தான் அதிகம். ஆகவே எந்த ஒரு வாய்ப்பையும் தவற விட இனி நாம் தயார் இல்லை. எமது மக்களின் பிரச்சினைகளை எடுத்து கூற எமக்கு கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் நாம் பயன்படுத்துவோம். அந்த அடிப்படையிலேயே நாம் இங்கே வந்துள்ளோம். ஆனால், இதுவும் கதைக்கள், கதாகாலேட்சபம் என்றால் நாம் விலகி விடுவோம். ஆனால், முன் கூட்டியே முடிவு எடுத்து, இது சரிவராது என எடுத்த எடுப்பிலேயே எல்லாவற்றையும் நிராகரிக்கும் தேவை எமக்கு கிடையாது.

அதேபோல் இன்று (நேற்று) நடந்தது, தேசிய சபை கூட்டம். இது தேசிய அரசாங்கமல்ல. தேசிய அரசில் நாம் இல்லை." - என்று தெரிவித்திருக்கின்றார் மனோ கணேசன்.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அவர் போதிக்க முனையும் பாடம் விளங்குகின்றதா வாசகர்களே?

- மின்னல் -

## அரசைக் கவிழ்க்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற தகவல்களிற்கு மத்தியில் உயர் பாதுகாப்பு வலயங்கள் ஏன் அவசியம், ஏன் அவற்றைப் பாதுகாக்கவேண்டும் என்பன குறித்த. உயர்நீதிமன்றத்திற்கு அரசாங்கம் தெளிவுபடுத்தவுள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜூலை9ம்திகதிக்குபின்னர்இரண்டாம் கட்டம் குறித்து விசாரணையாளர்களிற்கு கிடைத்த தகவல்கள் குறித்து அரசாங்கம் உயர் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவுள்ளது எனக் கூறப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் போல செயற்பட்டு, குழுவொன்று நாடாளுமன்றத்தைச் சுற்றிவளைத்து, நாடாளுமன்றத்தை கைபற்றத் திட்டமிட்டிருந்தது, புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பைத் தடுப்பதே இதன் நோக்கம் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் குழுவினர் உயர்நீதிமன்றத்தையும் சுற்றிவளைக்கத் திட்டமிட்டனர் என தெரிவித்துள்ள விசாரணையாளர்கள் இதனடிப்படையிலேயே கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்தப்பட்டன் எனவும் தெரிவித்துள்ளனர்.

## மிக மோசமான இனவாதப் பிரிவு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருந்தூர்மலை விவகாரத்தை ஒட்டிய ஆர்ப்பாட்டத்தை அடுத்து கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா, அவர் சார்பில் நேற்று நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் ஆற்றிய கடுமையான சட்ட வாதத்தை அடுத்துப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அந்த வழக்கின்போதே மேற்படி குற்றச்சாட்டை பகிரங்கமாக முன்வைத்தார் சுமந்திரன்.

குருந்தூர்மலையைச்சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632 ஏக்கர் பூர்வீக காணிகளை தொல்பொருள் திணைக்களம் அபகரிக்க முயற்சிக்கின்றமை மற்றும், நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர் மலையில் தொடர்ந்து பௌத்த கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை என்பவற்றைக் கண்டித்து கடந்த 21அன்று குமுழமுனை மற்றும், தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதற்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் இ.மயூரன் ஆகியோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தொடர்ந்து கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரனை பொலிஸார் இதே விடயத்துக்கு விசாரணைக்கு அழைத்துக் கைதுசெய்து, பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

லோகேஸ்வரன் தொடர்பில் அடையாள அணிவகுப்பொன்றை பொலிஸார் கோரிய நிலையில், இம்மாதம் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதவான் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

அந்தவகையில் நேற்று இந்த வழக்கானது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

லோகேஸ்வரனை சிறைக்குள் தள்ள வேண்டும் என்ற தீய நோக்குடன் பொலிஸார் அடையாள அணிவகுப்பை உபயோகித்திருக்கின்றார்கள் என லோகேஸ்வரன் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் சுட்டிக்காட்டி கடுமையான வாதத்தில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து நீதிமன்று லோகேஸ்வரனை பிணையில் செல்ல அனுமதித்ததுடன், வழக்கை பெப்ரவரி 02 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இதுதொடர்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை விவகாரம் சம்பந்தமாக தொல்பொருட் திணைக்களத்தினுடைய செயற்பாடுகளுக்கு எதிராக கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தினை மையமாகவைத்து முதலிலே ரவிகரன், மயூரன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு பிணையிலே விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

அதன் பின்னர் லோகேஸ்வரனைக் கைதுசெய்து, அவரைப் பிணையிலே செல்ல அனுமதிக்காத வகையிலே, சூழ்ச்சியாக ஓர் அடையாள அணிவகுப்புத் தேவை என்ற ஒரு போலியான காரணத்தைச் சொல்லி அவரை ஒருவாரகாலம் விளக்கமறியலில் வைக்கச் செய்திருந்தார்கள். நேற்று அந்த அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது. அந்த அடையாள அணிவகுப்பு வெறும் நாடகமாக நடைபெற்றதென நான் நீதிமன்றிலேயே சொல்லியிருக்கின்றேன். அதற்கான ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கிறோம்.

லோகேஸ்வரன் ஒரு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி. மக்களுக்கு நன்றாகப் பரிச்சயமானவர். அவர் போராட்டத்தில் ஈடுபட்ட விடயம் பத்திரிக்கைகளிலே வெளிவந்திருக்கின்றது. அப்படியானதொரு சூழ்லிலே அடையள அணிவகுப்பு வைப்பதென்பது முற்றிலும் தேவையற்றதொரு விடயம்.

ஆனாலும் அதனை உபயோகித்து அவரை ஒருவாரகாலத்திற்காகவது சிறைக்குள் வைத்திருக். வேண்டும் என்ற தீய நோக்கத்துடன் பொலிஸார் செயற்பட்டிருக்கின்றார்கள் என்பதையும் நீதிமன்றிலே தெரியப்படுத்திருக்கின்றேன்.

இந்த அரசாங்கத்திற்கு அல்லது, அரசாங்கத் திணைக்களங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்ற அல்லது எதிர்ப்புத் தெரிவிக்கின்ற உரிமை சகல பிரஜைகளுக்கும் இருக்கின்றது. அது உரிமை மாத்திரமல்ல அது சகலருடைய கடமையும் கூட என்று உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் பல சொல்லியிருக்கின்றன. அவற்றை மேற்கோள்காட்டி நீதிமன்றிலே சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கின்றது.

பொலிஸார் வேண்டுமென்றே இந்த தொல்லியல் திணைக்களத்தினுடைய முறைப்பாட்டை வைத்து தீய எண்ணத்தோடு இதனைச் செய்திருக்கின்றார்கள். இவ்விடயத்தில் அடிப்படை மனித உரிமை வழக்குகள் தாக்கல்செய்யப்படும் என்பதனையும் சொல்லியிருக்கின்றேன்.

தொல்லியல் திணைக்களம் இந்தநாட்டிலே இருக்கிற மிக மோசமான இனவாதத் திணைக்களம். ஆகவே அவர்களுடைய செயற்பாடுகளுக்குக்கு எதிராக நாங்கள் தொடர்ந்து போராடுவோம்.

என்னவிதமான இடையூறுகள் ஏற்படுத்தினாலும் இந்த அநீதிக்கு எதிரான போராட்டம் ஒருபோது நிறுத்தப்படமாட்டாது - என்றார்.

## தமிழரின் நில ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவு அற்றவர்களே இதற்கு எதிராகக் கண்டனங்களை வெளியிடுகின்றனர் - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தமிழினத்தால் 'தியாக தீபம்' என்று போற்றப்படும் திலீபனை வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினைவேந்தியவர்களை உடனடியாகக் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு போரிலோ அல்லது வேறு எந்தச் சந்தர்ப்பத்திலோ உயிரிழந்தவர்களை அவர்களின் உறவுகள் அல்லது அவர்களின் இனத்தவர்கள் அமைதியாக நினைவேந்த முடியும். இதற்கு எதிராக எவரும் கருத்துக்களை வெளியிட முடியாது.

"தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையைப் பறித்துவிட்டு நாட்டில் எப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்? மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரச தரப்பினரும் அதன் நேர்வழி, மறைவழி பங்காளிகளும் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தியே வந்தார்கள்.

"தமிழ் மக்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்க எந்த அரசும் முன்வரவில்லை. இந்த நாட்டில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் தமிழர்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்கியே தீரும் என்றார்.

## தமிழர் மத்தியில் கட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களை ஈந்தவர்கள் எந்நாளும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

இது வெறுமனே நினைவுகளை மனத்திரையில் மீட்கும் சடங்குகள் அல்ல. மாறாக, அவர்களின் போராட்ட நியாயங்களையும் போராட்டத் தியாகங்களையும் அடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துகின்ற உயிர்ப்பான அரசியற் செயற்பாடுகளாகும்.

அரசியற் காரணங்களுக்காகப் போராடி மடிந்தவர்களின் நினைவேந்தல்களில் அரசியல் நீக்கம் செய்வது அவர்களின் போராட்ட நியாயங்களைக் குழிதோண்டிப் புதைப்பதாகும். இத்தகைய நினைவேந்தல்களில் இனத்துவ அரசியலைத் தாண்டிக் கட்சி அரசியல் மேலோங்குவது போராட்டத் தியாகங்களைச் சூறையாடுவதாகும்.

ஆனால், துரதிஷ்டவசமாக தமிழ்த் தேசிய அரசியற் களத்தில் இன்று இவையே அதிகம் நிகழ்ந்தேறுகின்றன. நினைவேந்தல் குழப்பங்களுக்கு யார் காரணம் என்ற கேள்விக்கும் அப்பால் இவை நிகழ்ந்திருக்கவே கூடாது என்பதுதான் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் வேதனைக் குரலாக உள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)






# பெரமுன முன்னெடுத்த திட்டங்களின் பலன்கள் மக்களுக்கு முழுமையாகக் கிடைத்துள்ளனவாம்!

## திருப்தியுறுகிறார் அதன் பொதுச்செயலாளர் காரியவசம்



சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பொருளாதார மீட்சிக்கான இறுதி மற்றும் முழுமையான தீர்வல்ல. தேசிய உற்பத்திகளை மேம்படுத்த பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்த திட்டங்களின் பலனை நாட்டு மக்கள் முழுமையாகப் பெற்றுக்கொண்டுள்ளார்கள் என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

குறுகிய அரசியல் கொள்கை மற்றும் ஊழல் மோசடியாளர்களுடன் இனி ஒருபோதும் ஒன்றிணையப் போவதில்லை. நாட்டு மக்கள் அங்கீகரிக்கும் தரப்பினருடன் வெகுவிரைவில் கூட்டணியை ஸ்தாபிப்போம் எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –


பொருளாதார நெருக்கடிக்கு ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மாத்திரம் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதுவரை ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொறுப்புக் கூற வேண்டும். தேசிய உற்பத்தியை மேம்படுத்த பொது ஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்த திட்டத்தின் பெறுபேற்றை நாட்டு மக்கள் தற்போது முழுமையாகப் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பொருளாதார மீட்சிக்கான இறுதி மற்றும் முழுமையான தீர்வல்ல. நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளாமல் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண உரிய திட்டங்களை செயற்படுத்தினோம். இருப்பினும் பல்வேறு காரணிகளால் திட்டங்களை வெற்றிபெறச் செய்ய முடியாமல் போனது.

தேசிய உற்பத்திகள் மற்றும் தொழிற்துறையை மேம்படுத்தினால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண முடியும். தேசிய தொழிற்துறையை வெகுவிரைவில் மேம்படுத்துவோம். அரசாங்கம் மாற்றமடையும் போது பொருளாதார கொள்கைகள் மாற்றமடையாமலிருக்க எதிர்வரும் காலங்களில் சட்ட ரீதியில் உறுதிப்பாடு எட்டப்படும்.

ஶ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகித்த தரப்பினர் தான் தற்போது கூட்டணியில் இருந்து விலகி பொதுஜன பெரமுனவின் தலைவர்களையும்,கடந்த அரசாங்கத்தையும் விமர்சித்துக் கொள்கிறார்கள். இவ்வாறான சந்தர்ப்பவாதிகளுக்கு நாட்டு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

குறுகிய அரசியல் நோக்கமுடையவர்கள் மற்றும் ஊழல்வாதிகளுடன் இனியொருபோதும் நாம் ஒன்றிணையப் போவதில்லை. மக்கள் அங்கிகரிக்கும் தரப்பினருடன் கூட்டணியை வெகுவிரைவில் ஸ்தாபிப்போம். – என்றார்.



## கோட்டாவை சந்தித்தார் சுப்ரமணியன் சுவாமி!

இந்திய பாரதீய ஜனதா கட்சியின் மூத்த அரசியல்வாதி சுப்ரமணியன் சுவாமி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் இல்லத்தில் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அநுர குமாராவின் நீலி கண்ணீர்

**ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திஸநாயக்க தமிழர்களின் நினைவேந்தல் உரிமைச் சர்ச்சை தொடர்பில் தமிழர் தரப்புக்குப் பரிவாக கருத்து வெளியிட்டிருக்கின்றார். அவர் அதில் சுட்டிக்காட்டிய இரண்டு விடயங்கள் கவனிக்கத்தக்கவை.**

**ஒன்று – தமிழர்களின் நினைவேந்தல் உரிமையை யாரும் மறுக்கவோ எதிர்க்கவோ கூடாது. அது அவர்களின் அடிப்படை உரிமை.**

**அடுத்தது – தமிழ் மக்களுக்கான உரிமையையும் தீர்வுகளையும் வழங்க எந்த அரசும் முன் வரவில்லை. இந்த நாட்டில் ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்தால் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கிய தீரும்.**

**தமது கட்சி நேர்மையான, நியாயமான கட்சி என்பது போல அவர் கருத்து தெரிவித்திருந்தாலும் அதை நம்புவதற்குத் தமிழர்கள் தயார் இல்லை என்பதை வெளிப்படையாக அவரிடம் கூறியேயாக வேண்டும்.**

**அவரது கூற்று பசுத்தோல் போர்த்த புலியின் போதனையாகவே தமிழர்களால் நோக்கப்படுகின்றது. இது, சாத்தான் ஓதும் வேதமோ என்ற ஐயமே தமிழர்கள் மத்தியில் மேலோங்கி நிற்கின்றது.**

**அவரது இக்கூற்றை அவரது உள்ளத்தில் இருந்து வெளிப்படும் உண்மை வார்த்தைகளாக நம்புவதற்குத் தமிழர்கள் தயாரில்லை.**

**தென்னிலங்கையின் பௌத்த, சிங்களப் பேரினவாத சிந்தனையில் இருந்து வெளிப்பட இயலாத – அதில் ஊறிப்போன – ஒரு சக்தியாகவே தமிழர்கள் இன்னும் ஜே.வி.பியை நோக்குகின்றனர். ஜே.வி.பியின் கடந்த கால பேரினவாதச் செயல்பாடுகளைத் தமிழர்கள் அவ்வளவு சுலபமாக மறந்து விட மாட்டார்கள். இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை அடுத்து 17 ஆண்டுகளாக இணைந்திருந்த வடக்கையும் கிழக்கையும் நீதிமன்றுக்குப் போய் பிரித்தவர்கள் ஜே.வி.பியினர் தான். அப்படிச் செய்தோம் என்று அதற்கான உரித்தை அவ்வப்போது தென்னிலங்கைக்கு நினைவூட்டி, அதன் மூலம் பேரினவாத வெறிப்போக்கின் அடிப்படையில் அமைந்த தங்களின் கொள்கை நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தி, அதற்கான ஆதரவையும் உறுதிப்படுத்திக் கொள்பவர்கள் அவர்கள்.**

**யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்களுக்கு பெரும் கொடூரங்கள் இழைக்கப்பட்டுள்ளன. அதற்காக சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு எதிராக வெளிப்படையான, நீதி, நியாயமான, சர்வதேச முறைகளுக்கு அமைவான சட்ட விசாரணை நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, நீதி முறை செய்யப்பட்டு, பொறுப்பு கூறல் நிலைநாட்டப்பட்டு, மீள நிகழாமை உறுதப்படுத்தப்பட வேண்டும் என தமிழர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.**

**நினைவேந்தலுக்கு எதிராக ஜே.வி.பியின் அரசியல் எதிரியான விமல் வீரவன்ஸ கொதித்தெழுந்தமையால் அதற்கு எதிராக இப்போது கருத்து வெளியிட்டிருக்கும் ஜே.வி.பியின் தலைவர், நீதி விசாரணை மற்றும் பொறுப்பு கூறல் விடயங்கள் தொடர்பில் நீதியை வலியுறுத்த முன்வருவாரா? வெளிப்படையாக – பகிரங்கமாக – நீதியை வலியுறுத்துவாரா?**

**இப்போது பேரினவாதத் திமிர்த்தன வெளிப்பாடுகள் அரசியல் ரீதியாக சற்று முடக்கப்பட்டு இருப்பதால், அந்த சூழ்நிலையில் தமிழர்களின் வாக்குகளையும் சூறையாடுவதற்காக ஆடு நனைவது குறித்து ஓநாய் கவலைப்படுவது போல நீலி கண்ணீர் வடிக்கிறார் ஜே.வி.பி. தலைவர். அவ்வளவுதான்!**

## அதியுயர் பாதுகாப்பு வலயமாக முழு நாட்டையும் அறிவித்தாலும் மக்களின் எழுச்சிப்போராட்டங்களை எவராலும் முடக்கமுடியாது!

### விமல் வீரவன்ஸ ஆக்ரோஷம்



முழு நாட்டையும் அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தினாலும் மக்கள் போராட்டத்தை முடக்க முடியாது என்பதை ஜனாதிபதி விளங்கிக்கொள்ள வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அவர் தீர்வு பெற்றுக் கொடுக்கவில்லை, மாறாக வெளிநாட்டு உல்லாச சுற்றுலா பயணங்களை மேற்கொள்கிறார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டினார்.

இலங்கைகம்யூனிசகட்சிகாரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

எரிபொருள் விநியோக கட்டமைப்பில் இரண்டாம் கட்டமாக நெருக்கடி நிலை தோற்றம் பெற்றுள்ளது. எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகிய சேவை கட்டமைப்பில் ஏற்பட்ட நெருக்கடியால் தான் கடந்த ஜூன் மாதம் 09 ஆம் திகதி மக்கள் போராட்டம் தீவிரமடைந்தது.

நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் 3 ஆம் மின்பிறப்பாக்கி செயலிழந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இது எந்தளவுக்கு உண்மை என நம்பிக்கை கொள்ள முடியாது.

எரிபொருள் விநியோகக் கட்டமைப்பில் மீண்டும் நெருக்கடி ஏற்பட்டால், நாட்டில் மீண்டும் மக்கள் போராட்டம் தீவிரமடையும்.

ரஸ்யாவிடமிருந்து எரிபொருள் மற்றும் நிலக்கரி ஆகியவற்றைக் குறைந்த விலைக்கு பெற்றுக்கொள்ள முடியும் என பலமுறை குறிப்பிட்டுள்ள போதும் அரசாங்கம் அது தொடர்பில் அவதானம் செலுத்தாமல் தன்னிச்சையாகச் செயற்படுகிறது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை இந்தக் குறுகிய காலத்தில் பலமுறை குறைவடைந்த போதும் தேசிய மட்டத்தில் எரிபொருளின் விலை குறைக்கப்படவில்லை.

ரஸ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு எரிபொருள் மற்றும் நிலக்கரி ஆகியவற்றைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அமெரிக்காவுடன் நட்புறவுடன் செயற்படுவதற்காக அரசாங்கம் ரஸ்யாவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதை தவிர்த்துள்ளது. இதன் பாதிப்பை நாட்டு மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில், மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை. மக்கள் போராட்டம் தீவிரமடையும் என்ற அச்சத்தில் தான் ஜனாதிபதி கொழும்பு நகரை அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

முழு நாட்டையும் அதி உயர் வலயமாக பிரகடனப்படுத்தினாலும் மக்கள் போராட்டத்தை முடக்க முடியாது என்பதை அரச தலைவர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் ஜனாதிபதி வெளிநாட்டுஉல்லாசசுற்றுலாபயணங்களை மேற்கொள்கின்றமை முற்றிலும் வெறுக்கத்தக்க செயற்பாடாகும். – என்றார்.

## சிறுவர்களாக ஏற்றுக்கொள்ளப்படும் வயதெல்லை நாட்டில் உயர்கின்றது!

இலங்கைக்குள் சிறுவராக இருக்க வேண்டிய ஒருவரின் வயதெல்லையை பதினாறிலிருந்து பதினெட்டாக உயர்த்தப்பட வேண்டும் என, சிறுவர்கள் மற்றும் இளம் ஆள்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண் – பெண் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை நாடாளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான நாடாளுமன்ற விசேட குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தலைமையில் அண்மையில் கூடியபோது இதுபற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய 'சிறுவர் மற்றும் இளம் ஆள்கள் கட்டளைச் சட்டம்' என்ற பதத்துக்குப் பதிலாக 'சிறுவர் கட்டளைச் சட்டம்' என்றும், 'சிறுவர் மற்றும் இளம் ஆள்கள்' என்ற வசனத்துக்குப் பதிலாக 'சிறுவர்' என்ற பதத்தைத் திருத்துவதற்கும் இதன் ஊடாக முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் அல்லது விதியில் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பில், அறிவித்தலில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் 'சிறுவர்கள்' எனக் குறிப்பிடப்படும் அனைத்து இடங்களிலும் அந்த வசனம் நீக்கப்பட வேண்டும் என இதன் ஊடாக முன்மொழியப்பட்டுள்ளது.

முதன்மைச் சட்டத்தின் 71 பிரிவின் (6) உப பிரிவில் உள்ள 'இந்த வயதுப் பிரிவில் உள்ள எந்தவொரு சிறுவர் அல்லது இளம் ஆள்களுக்குத் தண்டனை வழங்கும்போது எந்தவொரு பெற்றோர், ஆசிரியர் அல்லது உத்தியோகபூர்வ பாதுகாவலருக்குக் காணப்படும் உரிமையைப் பாதிக்கும் வகையில் அமையக் கூடாது' என்ற திருத்தம் இத்திருத்தச்சட்டமூலகத்தின்ஊடாகநீக்கப்பட்டுள்ளது.

23 ஆவது அத்தியாயமான சிறுவர்கள் மற்றும் இளம் ஆள்கள் கட்டளைச் சட்டத்தின் நோக்கம் சிறுவர்களின் மற்றும் இளம் ஆள்களின் பாதுகாப்புக்காக சிறுவர் குற்றவாளிகளைக் கண்காணிக்க சிறுவர்களுக்கான நீதிமன்றத்தை நிறுவுவதற்கான உத்தரவுகளை உருவாக்குவதாகும்.

2022.07.18ஆம் திகதி வெளியிடப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளம் ஆள்கள் (திருத்தம்) சட்டமூலத்துக்கு அமைய 23ஆவது அத்தியாயம் திருத்தப்படவிருப்பதுடன், நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினத்திலிருந்து இந்தத் திருத்தங்கள் நடைமுறைக்கு வரும்.

## முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வாய், முகம் மற்றும் தாடைச் சிகிச்சைகள்

முல்லைத்தீவு, செப். 30

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சில பாரிய சிகிச்சைகளுக்காக நோயாளர்கள், வெளி மாவட்டங்களான யாழ்ப்பாணம், வவுனியா வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு வரும் நிலை காணப்படுகின்றது.

வாய், முகம் மற்றும் தாடை சிகிச்சை சம்பந்தமான சிகிச்சை நடவடிக்கைகள் சத்திர சிகிச்சை நிபுணர்களால் முல்லைத்தீவில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் அகிலன் தலைமையிலான குழுவினரால் புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளிக்கு ஆறு மணி நேர முயற்சியின் பலனால் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையொன்றில் முதல் முதலாக இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட வைத்தியசாலையிலும் இந்த அறுவை சிகிச்சை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது என்பதை வைத்தியசாலை வட்டாரங்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# உலகத் தரம் வாய்ந்த ஏவுகணைகளுடன் இந்தியாவின் தேஜாஸ் போர் விமானங்கள்





ஃபிளையிங் டாகர்ஸ் (பறக்கும் கத்திகள்) என்றும் அழைக்கப்படுகின்ற, இந்திய விமானப்படையின் 45 ஆவது ஸ்குவாட்ரனின் கட்டளை அதிகாரி குறூப் கப்டன் சியாமந்தக் ராய் கடந்த வாரம் வியாழனன்று, இலகுரக போர் விமானம் (எல்.சி.ஏ.) தேஜாஸ் உலகத் தரம் வாய்ந்த ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ள மிகவும் திறமையான யுத்த விமானம் என்று குறிப்பிட்டார்.

சுலார் விமானப்படைத் தளம் தெற்கு தீபகற்பத்தின் மையத்தில் உள்ளது, இது வடக்கு மற்றும் கிழக்கு நோக்கி நிலப்பரப்பை மட்டுமல்ல, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கே உள்ள கடல்களின் வழியாகவும் நாம் சென்றடைவதை உறுதி செய்கிறது. எங்கள் போர் படையை நாடு முழுவதும் செலுத்தும் வகையில் மிகவும் திறமையான விமான மார்க்கத்தை அது தருகிறது – என்று ராய் இங்கு கூறினார்.

ஒரு விமானம் எடுத்துச் செல்லும் ஆயுதம் தனித்துவமானதாகவும் விமானத்தின் போர் திறனை அதன் பாத்திரத்தில் மிகப்பெரியதாகவும் மிகவும் வலிமையானதாகவும் ஆக்குகின்றது என்று குறூப் கப்டன் மேலும் கூறினார்.

இலகுரக போர் விமானமானது குறுகிய கால வெப்ப ஏவுகணைகளைச் சுமந்து செல்வதற்காகவும், தொலை தூரத்திற்கு அப்பாற்பட்ட காட்சி தூர ஏவுகணைகளைச் சுமந்து செல்வதற்காகவும் கட்டமைக்கப்பட்டுள்ளது என்றும் அவை இரண்டும் உலகத் தரம் வாய்ந்தவை என்றும் ராய் விளக்கினார்.

நாங்கள் ஆயிரம் இறாத்தல் எடையுள்ள வழக்கமான குண்டுகளையும், லேசர் – வழிகாட்டப்பட்ட வெடி குண்டுகளின் துல்லியமான இலக்கையும் கொண்டு செல்கிறோம். மேலும் ஒட்டுமொத்தமாக வானில் இருந்து வானுக்கு மற்றும் வானில் இருந்து தரைக்கான ஆயுதங்கள் என்ற முறையில் இவை எங்களை ஒரு பல் நோக்கு அல்லது பல இலக்கு விமானமாக்குகிறது என்று அவர் மேலும் கூறினார்.

இவ்விமானங்களில் தற்போது, செலவு மற்றும் உள்நாட்டுமயமாக்கலின் அடிப்படையில் கூறுகள் சுமார் 60 சதவிகிதம் மற்றும் திறமையான விமானங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 75 சதவிகிதம் என்று உள்நாட்டுமயமாக்கல் விதிமுறைகளின் சதவிகிதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்றும் ராய் விளக்குகிறார்

இந்திய விமானப்படையின் விங் கமாண்டர் ஆஷிஷ் மோகே கூறுகையில், சூலூரில் இரண்டு ஸ்க்வாட்ரான்கள் இலகுரக போர் விமானங்கள் உள்ளன, மேலும் அதில் சாரங் ஹெலிகாப்டர் காட்சிக் குழுவும் உள்ளது.

மோகே இலகுரக போர் விமானமான தேஜாஸின் போர்த்திறனை மெச்சுகிறார். மேலும் அச்சுறுத்தல் உணர்வுகளின் அடிப்படையில் இந்திய விமானப்படை தனக்கு வழங்கப்படும் எந்தவொரு பணியையும் மேற்கொள்ள முழுமையாக தயாராக உள்ளது என்றார்.

இலகுரக போர் விமானமான தேஜாஸின் பைலட்டாக இருக்கும் குறூப் கப்டன் எம். சுரேந்திரன் கூறுகையில், இந்த விமானம் தற்போது இந்திய விமானப் படையிடம் முழுமையாக இயங்கி வருகிறது, இந்திய விமானப் படையால் வழங்கப்படும் எந்தப் பணியையும் மேற்கொள்ளும் வகையில் அது செயல்படத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# இந்திய மாணவர்களுக்கான விசாவை அமெ. தாமதமின்றி வழங்க வேண்டும்!

## வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கர் வலியுறுத்து



நியூயோர்க்,செப்.29

இந்திய மாணவர்களுக்கான விசா வழங்குவதில் அமெரிக்காவில் தாமதம் ஏற்படுவதாகவும் , இது தீர்க்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்க அரசிடம் இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெயசங்கர் வலியுறுத்தி உள்ளார்.


அமெரிக்கா சென்ற அவர் மூத்த அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

என்னுடைய அமெரிக்கப் பயணம் மிக பயனுள்ளதாக அமைந்துள்ளது. இந்தியா – அமெரிக்க உறவு உலகம் தழுவிய மாற்றத்தை ஏற்படுத்தும். இரு நாட்டு உறவு மிக முக்கியமானதாகும். அமெரிக்க விசா நடைமுறை சிக்கலை தீர்க்க வேண்டும், பல இந்திய மாணவர்கள் அமெரிக்க விசா கிடைக்காமல் சிரமப்படுகின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டும்.

இது குறித்து அமெரிக்க அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளேன். இது போன்ற நடைமுறை சிக்கலைத் தவிர்க்க வேண்டும். இந்தோ பசிபிக் பாதுகாப்பை உறுதி செய்வதில் அனைவருக்கும் முழு பொறுப்பு உள்ளது. ரஷ்யா உக்ரைன் போர் உலக பொருளாதாரத்தை பாதித்துள்ளது. – இவ்வாறு அவர் கூறினார்.



# சீனாவின் வளர்ச்சி விகிதம் பெருமளவில் சரிவு!



உலகின் முன்னணி பொருளாதார நாடான சீனாவில் நிலவி வரும் நெருக்கடிக்கு மத்தியில், சீனாவின் வளர்ச்சி விகிதம் சரிவடையலாம் என உலக வங்கி கணித்துள்ளது.

சீனாவின் ரியல் எஸ்டேட் துறையில் நிலவி மந்த நிலை, ஜீரோ கொவிட் கொள்கை, இது 30 வருடங்களில் இல்லாத அளவுக்கு சீனாவின் வளர்ச்சி விகிதம் பின்னடைவை சந்தித்துள்ளது.

கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான வருடாந்திர வளர்ச்சி குறித்தான கண்ணோட்டம், 5 வீதத்தில் இருந்து 3.2 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா ஆய்வு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதில் சீனாவின் பங்கு முக்கியமானதாகும். இது கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் 86 வீதப். பங்கு வகிக்கிறது. இதற்கிடையில் தான் உலகின் இரண்டாவது பொருளாதார நாடான சீனாவின் உற்பத்திப் பெருக்க வீதக் குறியீட்டை உலக வங்கி குறைத்துள்ளது. இது வெறும் 2.8 வீதம் மட்டும் இருக்கும் என உலக வங்கி கணித்துள்ளது.

அதேசமயம் மற்ற 23 நாடுகளின் வளர்ச்சி விகிதம் சராசரியாக 5.3 வீத வளர்ச்சியை எதிர்பார்ப்பதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

2021 இல் இருந்து 2.6 வீத வளர்ச்சியினை விட இது இரட்டிப்பாகும்.

சீனாவின் மாறுபட்ட பாதையால் 1990க்கு பிறகு முதல் முறையாக வருடாந்த உற்பத்திப் பெருக்கத்தின் வளர்ச்சியில் மற்ற நாடுகளுக்கு பின்னால் அது பின் தங்கியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆட்சியாளர்கள் சிலரின் ஊழல்மோசடிகளே நாட்டின் வங்குரோத்து நிலைக்கு காரணம்!

ஆட்சியாளர்களின் சிலரின் ஊழல்மோசடி செயற்பாடுகளே தற்போது நாடு முழுமையாக வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதற்கான பிரதான காரணமென முன்னாள் ஜனாதிபதியும் தெற்காசிய கொள்கை மற்றும் ஆராய்ச்சிக்கான நிறுவனத்தின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அதுமாத்திரமன்றி நாட்டுமக்களின் மனங்களில் பிரிவினை எண்ணம் இல்லை. மாறாக சில அரசியல்வாதிகள் தமது தனிப்பட்ட சுயலாபங்களுக்காக இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தும் நோக்கில் பிரிவினை எண்ணத்தை விதைக்கின்றார்கள் என்று குறிப்பிட்டிருக்கும் அவர், அண்மையில் காலிமுகத்திடலில் இடம்பெற்ற போராட்டத்தில் எவ்வித இன, மத, மொழி ரீதியான பேதங்களுமின்றி அனைத்து மக்களும் ஒன்றுகூடியமையே அதற்குச் சான்றாகும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

தெற்காசிய கொள்கை மற்றும் ஆராய்ச்சிக்கான நிறுவனம், நெதர்லாந்து தூதரகத்தின் அனுசரணையுடன் 'பெண் கவுன்சிலர்கள் மூலம் நல்லிணக்கம்' என்ற செயற்திட்டத்தை கடந்த 2021 ஒக்ரோபர் மாதம் ஆரம்பித்தது.

உள்ளூராட்சி மன்றங்களில் இயங்குநிலையிலுள்ள பெண் அரசியல்வாதிகள் மற்றும் சமூக ஆர்வலர்களின் பங்குபற்றுதலுடன் அடிமட்டத்திலிருந்து இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புவதை இலக்காகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்திட்டத்தின் வருடாந்தப்பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி தெற்காசிய கொள்கை மற்றும் ஆராய்ச்சிக்கான நிறுவனத்தின் தலைவர் என்ற ரீதியில் அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அந்த உரையில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

பெண்கள் வலுவூட்டலை இலக்காகக்கொண்டு கடந்த காலங்களிலிருந்து முன்னெடுக்கப்பட்டுவரும் பெரும்பாலான செயற்திட்டங்களுக்கு நெதர்லாந்து அரசாங்கம் தொடர்ச்சியாக ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. அந்தவகையில் இலங்கையில் பலவருடகாலப் போராட்டத்தின் பின்னர் பெண்களுக்கென உள்ளூராட்சி மன்றங்களில் 25 சதவீத கோட்டா கட்டாயமாக்கப்பட்டது.

ஆனால் 52 சதவீத பெண்கள் சனத்தொகையைக்கொண்ட நாட்டில் பெண்களுக்கென குறைந்தபட்சம் 35 சதவீத கோட்டா ஒதுக்கப்படவேண்டுமெனினும், இதனை வரவேற்கத்தக்கதோர் ஆரம்பமாக நோக்கமுடியும்.

இருப்பினும் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் ஆண்கள், பெண் உறுப்பினர்களை முறையற்ற விதத்தில் நடத்துவதையும், பாலியல் ரீதியில் தவறாக அணுகுவதையும் அவதானிக்கமுடிகின்றது. எனவே பெண் உறுப்பினர்களுக்கு உரியவாறான முகாமைத்துவம் சார்ந்த பயிற்சிகளை வழங்கவேண்டிய பொறுப்பு அந்தந்த அரசியல் கட்சிகளுக்கு இருக்கின்றது.

தற்போது நாடு பொருளாதார ரீதியில் முழுமையாக வங்குரோத்துநிலையை அடைந்திருக்கின்றது. இதற்கு சில ஆட்சியாளர்களின் ஊழல்மோசடிகள் மாத்திரமே பிரதான காரணமாகும். எனவே நாட்டின் வளங்களைக் கொள்ளையடிப்பதன் மூலம் இதற்குத் தீர்வுகாண முடியாது. எமது அரசு வங்குரோத்துநிலையை அடைந்திருக்கின்றது என்றால் நாமனைவரும் வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டோம் என்பதே அதன் பொருளாகும்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே எமது தெற்காசிய கொள்கை மற்றும் ஆராய்ச்சிக்கான நிறுவனம் நாடளாவிய ரீதியில் 'பெண் கவுன்சிலர்கள் மூலம் நல்லிணக்கம்' என்ற செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

பல்வேறுபட்ட சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதும், அமைதியை நிலைநாட்டுவதுமே இந்தச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். அனைவரும் தம்மைச்சூழவுள்ள சமூகங்களின் பல்லினத்தன்மை, மொழி, கலாசாரம் ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கவேண்டும்.

நானறிந்தவரை கொழும்பிலுள்ள சிங்களப் பிள்ளைகள் தமிழ்ப்பிள்ளைகளுடனும் தமிழ்ப்பிள்ளைகள் சிங்களப்பிள்ளைகளுடனும் கலந்துரையாடுவதற்குப் பின்நிற்கும் போக்கு காணப்பட்டது. பாடசாலை மட்டத்திலேயே சிறுவர்களை இன, மத, மொழியியல் ரீதியில் வேறுபிரித்து, தனித்தனியாகப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்ற தவறான நடவடிக்கையே இவற்றுக்குக் காரணமாகும்.




சில அரசியல்வாதிகள் தமது தனிப்பட்ட சுயலாபங்களுக்காக இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். தேர்தல் பிரசாரங்களின்போது சிங்கள அரசியல்வாதிகள் இது தனிச்சிங்கள பௌத்த நாடு என்றும், தமிழ் அரசியல்வாதிகள் தமக்குரிய தனிநாட்டை வழங்கவேண்டும் என்றும், முஸ்லிம் அரசியல்வாதிகள் அதற்கு ஈடான பிறிதொரு விடயத்தை முன்னிறுத்தியும் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

இருப்பினும் அண்மையில் காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டங்களின்போது அவற்றில் எவ்வித இன, மத, மொழிபேதங்களுமின்றி நாடளாவிய ரீதியிலிருந்து பெருமளவான மக்கள் கலந்துகொண்ட அதிசயத்தைக் காணமுடிந்தது. சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மதகுருமார் அங்கு ஒன்றுகூடியமையும், முதன்முறையாக முஸ்லிம்கள் பொது இடமொன்றில் அனைத்து மதத்தவர்களினதும் பங்கேற்புடன் நோன்பு திறந்ததையும் அவதானிக்கமுடிந்தது.

இதன்மூலம் நாட்டு மக்களின் மனங்களில் பிரிவினை எண்ணம் இல்லை என்பதையும், மூன்றாம் தரப்பினரான அரசியல்வாதிகளே அந்த எண்ணத்தை விதைக்கின்றார்கள் என்பதையும் தௌ;ளத்தெளிவாகப் புரிந்துகொள்ளமுடிந்தது.

ஆகவே நாம் எமது சமூகத்தில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை வலுப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேம்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தினார்.

## பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள் சிலருக்கு இடமாற்ற உத்தரவுகள்?

23 பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் அரசியல்வாதிகளின் வீடுகள் எரிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய உயர் பொலிஸ் அதிகாரிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி 23 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக மே மாதம் இடம்பெற்ற போராட்டத்தின் போது போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலின் எதிரொலியாக பல முக்கிய அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவங்களை தடுக்க அந்தந்த பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் 23 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## தவறான சிகிச்சையால் ராகமவில் பெண் சாவு அறிக்கை கோருகின்றது சுகாதார அமைச்சு!

திருமணமான இளம் பெண் ஒருவர் சத்திர சிகிச்சையின்போது ஏற்பட்ட தவறால் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சு ராகம வைத்தியசாலையிடம் அறிக்கை கோரியுள்ளது.

தெலத்துர ஜா – அல பிரதேசத்தில் வசித்து வந்த புத்திக்க ஹர்னி தர்மவிக்ரம என்ற இளம் திருமணமான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், சுகாதார அமைச்சு ராகம வைத்தியசாலைக்கு அறிக்கை கோரியுள்ளது.

ராகம வைத்தியசாலையில் 25 நாள்களாக சிகிச்சை பெற்று வந்த அவர் கடந்த 25 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

வத்தளை தனியார் வைத்தியசாலையில்



உரிய பராமரிப்பு இன்றி மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையால் தனது சகோதரி மிகவும் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார் என அவரது சகோதரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

திருமணமாகி ஒரு மாதமும் சில நாளட்களும் ஆன நிலையில், குறித்த இளம் பெண் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தட்டச்சு இயந்திரத்தின் விலை 3 லட்சம் ரூபாவாக உயர்ந்தது!

பார்வையற்றோர் சமூகம் பயன்படுத்தும் தட்டச்சு இயந்திரத்தின் விலை ஒரு லட்சத்து 40 ஆயிரத்தில் இருந்து மூன்று லட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

தேசிய ஒற்றுமை முன்னணியின் தலைவரும் பார்வையற்றோருக்கான தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான பிரசன்ன விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தட்டச்சு இயந்திரம் உள்ளிட்ட பல உபகரணங்களின் விலை இரண்டு மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாகவும் இதன் காரணமாக பார்வையற்ற சிறுவர்களின் கல்வி கூட பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாதாரணக் குழந்தைகள் பயன்படுத்தும் புத்தகம், பேனா போன்ற பார்வையற்ற குழந்தைகள் கல்விக்காகப் பயன்படுத்தும் பலகையின் விலை சுமார் 300 ரூபாவாக இருந்த நிலையில் தற்போது 3 ஆயிரம் ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும். எனினும் அவை வாங்குவதற்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

விசேட தொழில்நுட்ப முறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒலிப்புத் தகங்களைக் கேட்கும் தொழில்நுட்ப சாதனத்தின் விலை 22 ஆயிரம் ரூபாவில் இருந்து 60 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

டொலரின் பெறுமதி அதிகரிப்புடன் இந்த உபகரணங்களை அரசாங்கம் அத்தியாவசியமற்ற பொருள்களாக அறிவித்தமையால் இந்த உபகரணங்களின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பார்வையற்றோர் மிகவும் குறைந்த வசதிகளில் மிகவும் சிரமப்பட்டு வாழும் ஒரு பிரிவினர்.

இவர்களுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் அத்தியாவசியமற்றவை என அரசால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அந்த உபகரணங்கள் இறக்குமதி செய்யப்படவில்லை. இறக்குமதி செய்தாலும் வாங்க முடியாத அளவுக்கு அதிக விலைக்கு விற்க வேண்டியுள்ளது.

இது மிகவும் அநியாயம். இப்படியே தொடர்ந்தால், பார்வைக் குறைபாடுள்ள குழந்தை எதையும் கற்றுக்கொள்ள முடியாமல் போகும். இந்த நிலையில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்தார்.

அமைச்சரவையை நியமிக்கும் போது, மாற்றுத்திறனாளிகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய, உணர்வு பூர்வமான அமைச்சரை நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தட்டினால் திறக்கப்படுமா?



என்.சத்தியமூர்த்தி

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், தற்போது தமிழர்கள், தங்களது காணிகளை அரசே கைப்பற்றுவது குறித்து, புதிய போராட்டங்களை முன்னெடுத்துள்ளார்கள். முன்பெல்லாம், தங்களது காணிகளை இராணுவம் கையகப்படுத்தியது என்பதே அவர்களது குற்றச்சாட்டாக இருந்து வந்தது. அண்மை



காலங்களில், அரசின் சிவிலியன் திணைகளங்களும் அந்தப் புண்ணியத்தை கட்டிக்கொண்டிருக்கின்றன.

தொல்லியல் திணைகளம், வன திணைக்களம் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு திணைகளம் ஆகியவவை, தமிழர்களுக்கு தொல்லை கொடுக்க துவங்கி சில மாதங்கள் ஆகி விட்டன. ஏன், முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலையில் இந்து கோவில் நிலத்தின் ஒரு பகுதியில் புத்தர் கோவில் கட்டுவதற்கான முயற்சியை எதிர்த்து கடந்த வருடமே போராட்டங்கள் நடந்தன.

தமிழர்களின் அந்தப் போராட்டங்களை ஒட்டி, அவர்களின் முன்னெடுப்புக் காரணமாக, உள்ளூர் நீதிமன்றம் புத்தர் கோவில் கட்டுவதற்கு இடைக்கால தடை விதித்திருந்தது. அதனை எதிர்த்து இன்று வரை மேலன்முறையீடு செய்யாமல், அதே பணியை தற்போது மீண்டும் ஆரம்பித்து உள்ளனர். அதனை எதிர்த்து தமிழர்கள் மீண்டும் எழுச்சி கொள்வார்கள் என்ற காரணத்தினால், பொலிஸ் பாதுகாப்பு வேறு கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் உள்ளூர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்தை, புத்தர் கோவிலை எழுப்பும் பௌத்த துறவிகளும் அவர்களுக்கு ஆதரவான அவர்கள் சார்ந்த மக்களும் செயதிருக்கிறார்கள். அதே குற்றத்தை, சட்டத்திற்கு புறம்பான அவர்களது செயல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொலிஸ் அதிகாரிகளும், ஏன், முல்லைதீவு மாவட்ட ஆட்சியாளர்களும் கூட செய்திருக்கிறார்கள்.

அவ்வாறு பாதுகாப்பு கொடுக்க எங்கிருந்து உத்தரவு வந்தது என்று தெரிந்தால், பொலிஸ் மாஅதிபரும் கூட அதே குற்றத்தைச் செய்திருக்கிறார் என்று கூற முடியும். அது போன்றே, மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் உத்தரவு எங்கே இருந்து வந்தது என்பது குறித்து தமிழர் தரப்பு கண்டுபிடித்து நீதி மன்றங்களின் மூலம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**ஐந்தில் ஒன்று**

இது போன்றே கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை, திருகோணேஸ்வரர் ஆலய நிலத்திலும் அத்துமீறல் நடந்துள்ளது. இது குறித்து மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நீண்ட ஒரு கடிதத்தை எழுதியுள்ளார். அதில் பல்வேறு சரித்திர உண்மைகளைப் புட்டு வைத்துள்ள சம்பந்தன், சிங்கள இனத்தை உருவாக்கிய விஜயனின் காலத்திற்கும் முற்பட்ட ஐந்து சைவ கோவில்களை வரிசைபடுத்தி உள்ளார். அதில் கோணேஸ்வரமும் ஒன்று.

இன்றைக்கு, 2,500 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் கிழக்கு பகுதியில் இருந்து விஜயன் இலங்கைக்கு வந்தான் என சிங்கள வரலாறைக் கூறும் மகாவம்சம் சொல்லுகிறது. அதற்கும் முன்னரே இந்த இந்து ஆலயங்கள் இருந்தமையை, சரித்திர ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி சம்பந்தன், ஜனாதிபதிக்கான கடிதத்தில் கூறி உள்ளார்.

அத்தகைய கோவிலின் வெளிப்புறத்தில் ஒரு பகுதியில் தான் புத்தர் சிலை ஒன்றை நிறுவி, அதற்கென தனி பாதையும் செப்பனிடப்பட்டுள்ளது. இது அண்மைக் காலம் வரை கோணேஸ்வரர் ஆலயத்தின் சொந்தமாக, அதன் கட்டுப்பாட்டிலும் பாவனையிலும் இருந்த காணி.

**வடகிழக்கு மீள் இணைப்பு**

இது இப்படி என்றால், கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளை மீள் அறுதியிட்டு, வடக்கு – கிழக்கு எதிர்கால இணைப்பிற்கான சாத்தியங்கள் இல்லாமலாக்க, அரசு தரப்பில் முன்னெடுப்புகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்றும் சம்பந்தன் தெரிவித்துள்ளார். இதுவும் முந்தைய கோட்டபாய ஆட்சியில் துவங்கி, இன்று வரை தொடர்வதாகவே கருத இடமிருக்கிறது.

இருபது ஆண்டுகளுக்கும் முன்னர், சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாக இருந்த போதும், இது போன்ற ஒரு முன்னெடுப்பை செய்ய அவர் தயாராயிருந்தார். ஆனால், அது வடகிழக்கு இணைப்பிற்கு துணை போகும் விதத்தில், தமிழர்கள் அல்லாத பகுதிகளை பிற மாவட்டங்களோடும், மாகாணங்களோடும் இணைப்பதற்கு வழி செய்யும் வகையில் அமைந்தது.

அதாவது, வடக்கு – கிழக்கு இணைப்பிற்கு பிற்காலத்தில் எந்தவொரு பிரச்சினையும் வந்து விடக்கூடாது என்ற வகையில் சந்திரிகா அம்மையாரின் முன்னெடுப்புகள் இருந்தன. ஆனால், இன்றோ அந்த இரண்டு தமிழர் மாகாணங்களும் இணைந்து விடக்கூடாது என்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மீள் இணைப்பு தேவையா?**

இதனிடையில், மீள் இணைப்பு தேவையா? என்ற கேள்வியை தமிழர் அரசியல் மற்றும் சமூக தலைமைகள் உணர்ச்சிபூர்வமாக இல்லாமல் அறிவுபூர்வமாக சிந்தித்து செயல்பட வேண்டும். உண்மையை சொல்லப்போனால், வடக்கு வாழ் தமிழர்கள், அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள், கிழக்கு மாகாண தமிழர்களை ஒரு பொருட்டாகவே மதித்ததில்லை என்பதே உண்மை.

அவர்களிடம் பெண் எடுக்கவோ, பெண் கொடுக்கவோ, குறிப்பாக யாழ் தமிழர் குடும்பங்கள் தொடர்ந்து தயக்கம் காட்டி வந்துள்ளன. அது இன்று வரை முற்றிலும் காணாமல் போய்விடவில்லை. அதை விட தீபகற்பம் என்று அரசியல் காரணங்களுக்காக ஒற்றை நிலபகுதியாக பேசும் யாழ் தமிழர்கள், அண்மையில் இருக்கும் தமிழ் பேசும் தீவு மக்களுக்கே மரியாதை கொடுப்பதில்லை.

இதில், ஜாதி பாகுபாடுகள் இல்லை, மாறாக, சமூகம், அந்தஸ்து ஆகியவையே முக்கிய காரணிகளாக இருந்து வந்துள்ளன. அந்த வகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா அம்மான் பிரிந்து செல்வதற்கும் இந்த வடக்கு – கிழக்கு பாகுபாடு ஒரு முக்கிய காரணி என்பதையும் மறுக்கமுடியாது.

என்ன, நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னரான முதல் நாடாளுமன்ற தேர்தலில், தந்தை செல்வாவையும் வடக்கு வாழ் வாக்காளர்கள் தங்களது பிரதிநிதிகளில் ஒருவராக தேர்ந்தெடுத்திருந்தால், இரு மாகாண இணைப்பு என்ற கருத்தியல் ரீதியான பிரச்சினை தோன்றியிருக்குமா என்பது கேள்விகுறியே. காரணம், அது நடந்து முப்பது ஆண்டுகள் முடிந்த பின்னரும், கிழக்கு வாழ் தமிழர் தலைவரான சம்பந்தனையே, யாழ்பாண வேட்பாளர்கள் தங்களது நாடாளுமன்றப் பிரதிநிதிகளில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கவில்லை.

இதுவே, கிழக்கு மாகாண தமிழ் வாக்காளர்கள் வடக்கு மாகாண இன தலைவர்களுக்கு அளித்த பதில் மரியாதை. அதுவே, இன்று கிழக்கு மாகாணத்தில், வடக்கில் வியாபித்திருக்கும் தமிழர் கூட்டமைப்பு கிட்டத்தட்ட காணாமல் போய்விட்டதற்கு காரணமாக இருந்தது. அதற்கான சாட்சியமாகவும் தொடருகிறது.

**அடுத்த கட்ட அறகலயா**

இது இப்படி இருக்க, தற்போதைய தமிழர் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு, அதிலும் குறிப்பாக, புதிதாக முளைத்துள்ள காணி பிரச்சனைகள் குறித்து பொதுவெளியில் பேசுவதற்கு, தென்னிலங்கையில் யாருமே இல்லையா? அதிலும் குறிப்பாக, கூட்டமைப்பு எந்த முகாந்திரமும் இல்லாமல் ஆதரிக்கும் சஜித் பிரேமதாஸா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சி உள்ளடக்கிய யாருமே, தற்போதைய காணி அபகரிப்பு குறித்து



வாய் திறந்தார்கள் எனத் தெரியவில்லை. இதுவே, அரசை எதிர்க்கும் மலையக தமிழர் கட்சிகள் அல்லாத அனைத்து சிங்கள, முஸலிம் தரப்புகளுக்கும் பொருந்தும்.

இவர்கள் தவிர, அண்மையில் அறகலயா போராட்டத்தின் போது பெரிய அளவில் பேசப்பட்ட ஜே.வி.பி. மற்றும் முன்னிலை சோலிஸ்ட் கட்சி ஆகியவை கூட வாயை திறக்கவில்லை. இதில், குறிப்பாக, முன்னிலை சோலிஸ்ட் கட்சியின் தலைவர் பிரேமகுமார் குணரத்தினத்தோடு கூட்டமைப்பின் சுமந்திரனும் சாணக்கியனும் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியமை நினைவிற்கு வரும். அது போலவே, சுரேஷ் பிறேமசந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். கூட குணரத்தினத்துடன் ஓர் நிகர்நிலை பேட்டி எடுத்திருந்தது.

இதற்கு அப்பாலும் சென்று, அரசியல் வாதிகள் அல்லாத அறகலயா போராட்டக்காரர்கள், குறிப்பாக அவர்கள் சார்ந்த சிவில் சமூக அமைப்புகள் எவையுமே தமிழர் பிரச்சினைகளுக்கு இது வரை குரல் கொடுக்கவில்லை. காலிமுகத் திடலில் அவர்கள் போராட்டம் நடத்திய போது அவர்களை ஆதரித்த தமிழ் மக்களுக்கு கொடுத்த உத்திரவாதம் என்னவாயிற்று?

எவ்வாறு எங்களது போராட்டத்திற்கு நீங்கள் ஆதரவு தருகிறீர்களோ, அது போன்றே உங்களது உரிமைகளுக்கும் நாங்கள் குரல் கொடுப்போம் என்று காலிமுக திடலில் மைக் – வைத்து குரல் கொடுத்தார்களே, அவர்களை இங்கு எங்கேயுமே காணவில்லை. ஆனால், தற்போதைய ரணில் அரசை வீட்டிற்கு அனுப்புவதற்கு அடுத்த கட்ட அறகலயபா போராட்டத்தை முன்னெடுக்க இருப்பதாக அவர்களில் சிலர் பொதுவெளியில் பேசத் துவங்கி இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் பொறுத்த வரையில், சிங்களவர்களுக்கு அடிபட்டால் இரத்தம். அதுவே, தமிழர்கள் என்றால் தக்காளி சட்னி.

**ஜெனிவாவிற்கு படையெடுப்பு**

எது எப்படியோ, இன்றளவும் தமிழர் அரசியல் மற்றும் தமிழர் தலைமை சர்வதேச இராஜதந்திரத்தின் நுனி முடியை கூட புரிந்து கொண்டார் இல்லை. கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக, மார்ச், செப்ரெம்பர் என்று ஜெனிவாவிற்கு படையெடுப்பதால் மட்டும் இனப்பிரச்சினைக்கான உள்நாட்டு தீர்வு எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பது அவர்களுக்கு இன்னமும் புரியவில்லை, அல்லது, புரிந்தும் புரியாதது போல் பாவனை செய்கிறார்கள்.

மாறாக, சர்வதேசம் எத்தனை அழுத்தங்கள் கொடுத்தாலும், பிரச்சினைக்கான தீர்வுகள் உள்நாட்டில்தான் இருக்கின்றன. போர் குற்றங்கள் பெயரில் ராஜபக்ஷக்களையோ அல்லது இராணுவ தளபதிகளையோ வேண்டுமென்றால், சர்வதேச பொறிமுறைகள் மூலம் தண்டிக்கலாம். ஆனால், அரசியல் தீர்வு அல்லது காணாமல் போனவர்களுக்கான நஷ்ட ஈடு போன்ற விடயங்களில் கொழும்பு ஆட்சியாளர்கள் முனைப்பாக செயல்பட்டால் மட்டுமே விடிவு காலம் பிறக்கும்.

எப்போது சர்வதேச சமூகம் தனியொரு சிங்களத் தலைவரையோ அல்லது இராணுவ தளபதியையோ குறி வைக்கிறதோ, அப்போதே சிங்கள பேரினவாதம் என்பது யாரும் முயற்சி செய்யாமலே தென்னிலங்கை முழுவதும் பரவி விடும். நாட்டின் இறையாண்மையை வைத்து அரசியல் செய்வோர் அப்போதைய அரசு மீதான தங்களது சமூகம் சார்ந்த அழுத்தங்களை அதிகப்படுத்துவார்கள். இனப்பிரச்சினைக்கான முடிவு மேலும் பின் தள்ளப்படும். இதுவே கூட கடந்த கால அனுபவம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்



- மயூரகிரி சிவாச்சார்யார் -

# கேதார கௌரி விரதம் பக்திபூர்வமாக அனுசரிக்கும் முறைமையும் சிறப்பும்

சிவ விரதங்களில் சிறப்பானவை அஷ்ட மகா விரதங்கள் என்ற எட்டு விரதங்கள். அவற்றில் தனிச்சிறப்புடையது கேதார கௌரி விரதம்.

புரட்டாதி/ஐப்பசி மாதங்களில் வரும் வளர்பிறையில் ஆரம்பித்து அடுத்து வரும் ஐப்பசி மாத தேய்பிறை சதுர்த்தசி வரை இருபத்தொரு நாள்கள் இந்த விரதம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பது விதியாகும்.

சிலர் இதனை சக்தி விரதமாக நினைக்கிறார்கள். ஆனால், இது சிவ விரதங்களில் சிறப்புப் பெற்ற ஒன்றென்பதும் சிவபெருமானைக் குறித்து அம்பிகை அனுஷ்டித்த விரதம் என்பதும் அனைவரும் கவனத்திற் கொள்ள வேண்டியதாகும்.

கேதாரேஸ்வர விரதம், கேதார நோன்பு, கேதார கௌரி விரதம் என்றெல்லாம் அழைக்கப்படும் இந்த விரதம் இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற ஒரு நோன்பாக உள்ளது.

இந்த விரதம் பற்றி பல்வேறு புராண வரலாறுகள் உள்ளன. இந்த விரதம் மூலமே அன்னை அப்பனோடு ஒன்றாகி அர்த்த நாரீஸ்வரனாகினாள் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

பொதுவாக வரலக்ஷ்மி விரதம், கேதார கௌரி விரதம், காரடையா நோன்பு போன்றவை வீடுகளில் செய்யப்படும் விரத வழிபாடுகளே ஆயினும், இலங்கையில் அவை ஆலய வழிபாடுகளாகவே பெரிதும் இருந்து வருகின்றன.

முக்கியமாக கேதாரகௌரி விரதம் அனுசரிக்கும் பல்லாயிரம் அடியவர்கள் இலங்கையில் உள்ளனர். அவர்கள் குறித்த விரத வழிபாடுகளை ஆலயங்களில் சிவாச்சார்யார்களின் வழிகாட்டலிலேயே மேற்கொள்கின்றனர். இருபத்தொரு நாளும் அலுவலக – தொழில் நெருக்கடிகளால் கோயிலில் முறையாக வழிபாடாற்ற இயலாதவர்கள் கீழ்வரும் முறையில் தினசரி அல்லது நிறைவு நாளில் வீட்டில் இவ்வழிபாட்டை மேற்கொள்ளலாம்.

( ஏற்கனவே சிவபூஜை செய்பவர்களுக்கான பதி வன்று. புதிதாக அன்று செய்பவர்களுக்குரிய எளிய பதிவே இதுவாகும்)

முதலில் தூய்மையாகி, பூஜைசெய்யும் இடத்தையும் தூய்மைப்படுத்திக் கொண்டு பூஜைக்குரிய பொருள்களை தயார் செய்து கொள்ள வேண்டும். (நிறைவு நாளாயின் 21 வெற்றிலை, பாக்கு, பழம், அதிரசம் (அரியதரம்) போன்ற நெய்வேதனங்களையும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்)

இரண்டு கும்பங்களை வைத்து வலது பக்கம் சிவ பெருமானையும் இடது பக்கம் பார்வதியையும் கும்பங்களில் எழுந்தருள செய்து வழிபடலாம்.

இல்லாவிடில் ஒரு கும்பம் வைத்து அதில் அம்பிகையையும் புற்று மண்ணில் லிங்கம் அமைத்து அதில் பரமேஸ்வரனையும் வழிபடலாம்.



அந்த வாய்ப்பும் இல்லாதவர்கள் சிவன் – அம்மன் படத்தை வைத்து விளக்கேற்றி இந்த வழிபாட்டை செய்யலாம்.

மும்முறை தலையில் குட்டி பிள்ளையாரை வணங்கி சங்கல்பம் செய்து கொண்டு தூய நீரால் சுத்தப்படுத்திக் கொண்டு தீபம் ஏற்றி துதிகளை சொல்லி வழிபாடு செய்ய வேண்டும்.

இருபத்தொரு முடிச்சிட்ட நோன்பு நூலை லிங்கத்தின் மேல் அல்லது கும்பங்களின் மேல் அல்லது படத்தில் சாற்றி வழிபடலாம். அதனை பிறகு கோயிலில் எடுத்துக் கொள்வதாயினும் தவறில்லை.

சிவ பெருமானுக்கு உகந்த அஷ்டோத்திரசத நாமாவளி, லிங்காஷ்டகம் போன்ற சம்ஸ்கிருத தோத்திரங்களையும் திருமுறை, காப்பு பாடல் போன்றவற்றையும் பாடலாம்.

சிவாய நம:, வாஹாய நம:, மஹாதேவாய நம:, வ்ருபத்வஜாய நம:, கௌரீசாய நம:, ருத்ராய நம:, பசுபதயே நம:, பீமாய நம:, திரியம்பகாய நம:, நீல லோஹிதாய நம:, ஹராய நம:, ஸ்மர ஹராய நம:, பவாய நம:,சம்பவே நம:, சர்வாய நம:, சதாசிவாய நம:,ஈஸ்வராய நம:, உக்ராய நம:, ஸ்ரீ கண்டாய நம:, நீல கண்டாய நம: கேதாரேஸ்வராய நம:

– என்ற இருபத்தொரு நாமங்களால் 21 பூக்கள் அல்லது வில்வத்தால் அர்ச்சனை செய்வது சிறப்பாக சொல்லப்பட்டுள்ளது.

பின்பு இறைவன் – இறைவிக்கு தூபம், தீபம் காட்டி நெய்வேதனம் சமர்ப்பிக்க வேண்டும்.

நிறைவாக காப்பை எடுத்து –

**ஆயுஸ்ய வித்யாம்ச ததா சுகம் ச**
**ஸௌபாக்ய வ்ருத்திம் குரு தேவ தேவ/**
**ஸம்ஸார கோராம்புநிதௌ நிமக்நம்**
**மாம் ரக்ஷ கேதார நமோ நமஸ்தே//**

– என்ற சுலோகத்தை சொல்லி பிரார்த்திக்க வேண்டும்.

இலங்கையிலுள்ள கேதீச்சரத்தல மூர்த்தி கேதாரத்திலுள்ள தலத்திறைவனாகவே சொல்லப்படுபவர். எனவே, இயன்றோர் திருக்கேதீச்சரப்பதிகங்களை படிப்பதோடு கௌரி அம்பாள் சமேத கேதீச நாதரை அத்தலத்தில் ஒரு நாள் தரிசித்தும் வரலாம்.

**தொண்டரஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்**
**இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்**
**வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்**
**கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே.**

– முதலிய கேதார தலத்து தேவார பதிகங்களை பாடியும் வழிபடலாம்.

கேதாரகௌரியுடன் வந்தருளும் கேதார நாயகர் – அர்த்த நாரீஸ்வர இறை அருளால் துயரெலாம் அகலட்டும். இன்பமே பெருகட்டும் என்று பிரார்த்திப்போம்.

# சர்வ வல்லமை தரும் மகா நவராத்திரி விழா



- மயூரகிரி சிவாச்சார்யார் -

தேவீ மாகாத்மிய படனமும், தேவியின் கைவிரல்களில் தோன்றிய கங்காம்பிகையின் தீர்த்தமும், தேவியின் இருதிருவடிகளை தியானம் செய்வதும் , மஹாநவராத்திரி விரதமும் ஒரு மனிதனை ஞானவானாக ஆக்குகின்றன என்று சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

நவராத்திரம் – ஒன்பது இராத்திரிகள். பராசக்தியான ஜகன்மாதாவைப் பூசிக்கும் விடேமான காலம் இந்த ஒன்பது நாள்களாகும்.

இராமன் நாரத முனிவரின் ஆலோசனையை கேட்டு, துர்கா பரமேசுவரியை அதிதீவிரமாக பூசிக்க, நவராத்திரியின் அஷ்டமி தினத்தில் அன்னை சண்டிகா ரூபத்தில் காட்சியளித்து, ராமருக்கு யுத்தத்தில் வெற்றி உண்டாக அருளினாள் என்று தேவீ பாகவதம் கூறும்.

கண்ணனின் தந்தையான வசுதேவருக்காக வேண்டி, கர்காச்சாரியார் சரத்கால மஹாநவராத்திரியை ஒன்பது தினங்கள் விதிப்படி அனுஷ்டிக்க, உலகமாதா சண்டிகா பரமேஸ்வரி அஷ்டமி தினத்தில் மஹிஷாசுரமர்த்தினியாகத் தோன்றி கர்காச்சார்யாருக்கு அருளி, வசுதேவரின் வம்சம் விருத்தி அடையும்படி அருளினாள் என்றும் பராசக்தி அருளால் கிருஷ்ண அவதாரம் நிகழ்ந்தது என்றும் ஸ்காந்த புராணம் மானச காண்டம் கூறுகிறது.

மஹிஷாசுரனின் அட்டூழியங்களைப் பொறுக்க இயலாத தேவர்களும் முனிவர்களும், மும்மூர்த்திகளிடம் முறையிட்டனர். மும்மூர்த்திகளின் ஆணையால் அனைவரும் அம்பிகையை வேண்டினர். ஸ்ரீசண்டிகா பரமேஸ்வரியாக தோன்றி அன்னை மஹிஷனை வதைத்த செய்தியை ஸ்ரீதிரிபுரா ரஹஸ்ய மாஹாத்மிய காண்டம் கூறுகிறது. இந்த நாள் மகாநவமி ஆகும்.





தேவியின் பக்தனானவன் ஸ்ரீசக்ர மத்தியில் ஜொலிப்பவளாக லலிதாம்பிகையைப் பாவித்துக்கொண்டு, லலிதா ஸஹஸ்ரநாமத்தில் அம்பாளை 'மகாநவமி' தினத்தன்று அர்ச்சிக்கின்றானோ அவனுக்கு முக்தி கையில் உள்ளது என்றும் நூல்கள் கூறும்.

புரட்டாதி – ஐப்பசி மாதத்தில் நவராத்திரியின் எட்டாம் நாள் அஷ்டமியன்று மூலநட்சத்திரம் சேர்ந்து வருவது மஹாஷ்டமி என்று காளிகா புராணம் கூறும். அதுவே துர்காஷ்டமி ஆகும். இதுவே பத்திரகாளி தட்சயாகத்தை அழிக்கக் கோடிக் கணக்கான யோகினிகளுடன் தோன்றிய தினமாகும்.

ஆகம தந்திர சாஸ்திர நூல்கள் ஆறு வகையாகவும் நான்கு வகையாகவும் பலவாறாக நவராத்திரிகளை குறிப்பிட்டாலும், அவற்றில் வசந்த நவராத்திரியும் சாரதா நவராத்திரி என்ற கார்கால நவராத்திரியுமே புகழ்பெற்றது.

அவற்றிலும் அனைவராலும் அறியப்பட்டது இந்த நவராத்திரியே. இதுவே, உலகின் பல பாகங்களிலும் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுவது. சைவர் வைஷ்ணவர் சாக்தர் ஸ்மார்த்தர் அனைவராலும் அனுசரிக்கப்படுவது. இதனால் இது மகாநவராத்திரி என்று கூறப்படுகிறது.

இந்த புண்ணியமான காலத்தில் பராசக்தியை வழிபடுவோம். வறுமை, போதை, ஆணவம், அஞ்ஞானம் ஆகிய அரக்கர்கள் அழிந்து சக்தி பரவ பிரார்த்திப்போம்.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## உயர் பாதுகாப்பு வலயங்களும் மீள் குடியேற்றங்களும்




- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 136

புனர்வாழ்வுக்கும் மனிதாபிமான அடிப்படையிலும் தமிழ் மக்கள் தங்கள் காணிகளில் மீளக் குடியேறுவதற்கு விடாமல் தடுப்பதற்காக அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வை பாவிக்கப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டின் பின்னணிகளுடனேதான் ஐந்தாம் கட்டப் பேச்சுக்கள் பெப்ரவரி 7,8 இல் ஜேர்மனியில் நடந்தன.

உயர் பதவிகளில் இந்திய இராணுவத்திலிருந்து இளைப்பாறியதளபதி நம்பியார், இளைப்பாறியதன் பின்னர் பாதுகாப்பு பற்றி நாடுகளுக்கு அறிவுரை தரும் பெரும் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அந்



லெப்டினனட் ஜெனரல் சதீஷ் நம்பியார்

நிறுவனம் அமெரிக்காவிலிருந்து இயங்கினாலும் பல நாடுகளில் கிளைகளைக் கொண்டிருந்தது – இந்தியா உட்பட.

ஸ்ரீலங்காவின் பிரதிநிதியாக இருந்த மிலிந்த மொறகொட (தற்சமயம் நாட்டின் இந்தியாவுக்கான தூதுவர்) நம்பியார் மூலம் ஆராய்வு அறிக்கையொன்றை பெற்று, அதனைக் கொழும்பிலிருந்த ஊடகங்களுக்குக் கசிய விட்டு பேச்சுக்களின் அனுசரணையாளர்களுக்கும் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின் பிரகாரம் பேச்சுவார்த்தைகளும் போர் நிறுத்த ஒப்பந்தமும் தொடங்கிய போது ஒவ்வொரு பகுதியும் எங்கெங்கு நிலை கொண்டிருந்தனவோ அந்த நிலைகளில் இருந்து பின்வாங்க வேண்டியதில்லை, மீள்குடியேற்றங்களுக்காக ஸ்ரீலங்காவின் அதிகாரத்திலும் ஆட்சியிலும் இருக்கும் பகுதிகள் விடுவிக்கப்பட வேண்டுமாயின், அவற்றின் அருகில் இருக்கும் விடுதலை புலிகளும் பின்வாங்கி, வன்னித் தளங்களில் முடங்க வேண்டும், மக்களின் மீள்குடியிருப்பு என்ற போர்வையில்விடுதலைப்புலிகள்ஆயுதங்களுடன் அந்தப் பகுதிகளில் இயங்க முடியாது என்ற கருத்தாடல் அறிக்கையில் இருந்தது. மக்களின் புனர்வாழ்வையும் மனிதாபிமான வாழ்வாதாரங்களையும் அரச பொறுப்புணர்வோடு பார்க்காமல், அதற்கு விடுதலைப் புலிகளின் ஆயுதக்களையும், பின்வாங்கலையும், முடங்கலையும் சம்பந்தப்படுத்தி பரிந்துரைத்த அந்த அறிக்கை விடுதலை புலிகளால் நிராகரிக்கப்பட்டது.



யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் Trond Furuhovde ஐ கிளிநொச்சியில் வரவேற்கும் தமிழ்ச்செல்வன்.

ஒரு பக்கம் சமாதானத்தைப் பேசிக் கொண்டு, அடுத்த பக்கம் பாதுகாப்பு என்ற அளாப்புகளிலும், இன்னொரு பக்கம் இராணுவம் தன் நிலைகளைப் பலப்படுத்துவதிலும், கேந்திரப் பகுதிகளை உயர் பாதுகாப்பு வலய மையங்களாகப் பிரகடனப்படுத்துவதிலும், கடற்பரப்புகளில்கடற்புலிகளின்படகுகளைத் தாக்குவதிலும், அவற்றுக்குப் பல காரணங்களைக் கூறுவதிலும் நெருக்கடி முற்ற, அந்தச் சூழ்நிலையில்தான் ஐந்தாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் அரங்கேறின.

அந்தப் பேச்சுவார்த்தைகளின் தொடக்கத்துக்கு முதல் நாள் மாலையில் வன்னியிலிருந்து மதியுரைஞருக்கு செய்தி ஒன்று வந்தது. நெடுந்தீவுப் பகுதியில்விடுதலைப்புலிகளின்படகு ஒன்றை ஸ்ரீலங்கா கடற்படையினர் மறித்துச் சுற்றி வளைத்து, அதனைக் கைப்பற்றத் தயாராக இருக்கின்றனர் என்றும், அதனைத் தங்களது முகாமுக்கு இழுத்துச் செல்வதற்கு முயற்சிக்கின்றனர் என்றும் தகவல் தரப்பட்டது.

இதனை யுத்த நிறுத்த கண்காணிப்பாளரிடமும் ஸ்ரீலங்கா பிரதிநிதிகள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொடவிடமும் தெரிவித்து ஆவன செய்யுமாறு பாலசிங்கம் கேட்டார்.

இடையில் கடற் புலிகளின் தளபதி சூசை நேரடியாக மதியுரைஞரைத் தொடர்பு கொண்டு தமது போராளிகளைக் கடற்படை நெருங்கினால் அவர்கள் படகைத் தகர்த்துத் தற்கொலை செய்து கொள்வார்கள் எனத் தெரிவிக்க, அதனை அவர் பேச்சில் கலந்து கொண்ட இலங்கைத் தரப்புக்கு எச்சரிக்கையாக முன் வைத்தார். இடம் பெறக்கூடிய விபரீதங்கள் பற்றி மதியுரைஞர் விளக்கியும் சரியான நடவடிக்கைகள் இலங்கைத் தரப்பால் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் அந்த போராளிகள் படகை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து கொண்டார்கள்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர்ஜென்றல்Furuhovdeபுலிகளின் போராளிகள் படகையும் தகர்த்து தற்கொலை புரிந்தார்கள் எனத் தெரிவித்த அறிவிப்புடன் தான் ஐந்தாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் தொடங்கின.

இத்தகைய சம்பவங்கள் எவ்வளவு தூரம் பேச்சு வார்த்தைகளைப் பாதிக்கும் என்பது உணரப்பட்டாலும் ஸ்ரீலங்காத் தரப்பு உதட்டளவில் தாங்கள் புனர்நிர்மாணங்களும் மனிதாபிமான வாழ்வாதாரங்களை வெளிப்படுத்தக் கூடியதான கட்டுமானங்களையும் துரிதப்படுத்துகிறோம் என்று கதைகள் சொன்னார்களே ஒழிய, விடுதலைப் புலிகள் எதுவும் நிலத்தில் நடக்கவில்லை எனத் தமது போராளிகளின் தகவல்களை முன் வைத்தார்கள்.

அதேசமயம் விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச ரீதியில் அங்கலாய்ப்பு தரக் கூடிய குழந்தை போராளிகள் (child soldiers) அவர்களின்பிடியில் இருக்கிறார்கள், அவர்களும் விடுவிக்கப்பட்டு வாழ்வாதாரங்கள் தர அமைக்கப்படும் கட்டமைப்புகளுக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளுக்குப்புலிகளின்பிரதிநிதிதமிழ்ச்செல்வன் பதில் தந்தார். அப்படியான குழந்தைப் போராளிகள் நம்மிடம் இல்லை, இலங்கை படைகளால் அநாதரவாக் கப்பட்டபலகுழந்தைகளையும் இளைஞர்களையும் பல அனாதை இல்லங்களில் வைத்துப் பராமரிக்கிறோம், அங்கு இந்த வாழ்வாதார நிதிகள் தரப்படலாம் எனக் கூறினார்.

இப்படி இதழ் இதழாக சம்பவங்கள் பேசப்பட்டு நிலைகள் இறுகினவே ஒழிய, மக்களின் அவலங்களின் சுமை குறைக்கப்படுவதாகவோ தீர்வு வருவதாகவோ பிரபாகரன் கணிக்கவில்லை.

ஜேர்மனியில் நடந்த ஐந்தாம் கட்டப் பேச்சுக்களின் சில வாரங்களின் பின் பிரபாகரன் மதியுரைஞரையும் மனைவி அடேலையும் வன்னிக்கு வரவழைத்து சமாதானப் பேச்சின் போக்குகள், பெற்றுக் கொள்ளும் பயன்கள், இணக்கத்தின் தன்மைகள் பற்றிய கலந்தாலோசனையில் இறங்கினார்.

### பிரபாகரன் - பாலசிங்கம் மதியாலோசனைகள்

மதியுரைஞரும் அடேலும் 2 மார்ச் 2003இல் வன்னியை வந்து சேர சமஷ்டியை ஒட்டிய தீர்வின் அதிகாரங்களை பற்றி பேச்சுவார்த்தைகளும் நகராமல், புனர்வாழ்வு, மனிதாபிமான வாழ்வாதாரங்களுக்கு தங்களின் பொறுப்பை நிறைவேற்ற ஆதரவுகளை உருப்படியான முறையில் நடத்தாமல்,இப்படியான இழுபறிகளில் போவதில் பிரயோசனங்கள் உண்டா என்று உறுப்பினர்கள் கூட ஆதங்கமாகக் கேள்வி எழுப்புகிறார்கள் என பிரபாகரன் சுட்டிக் காட்டினார். இந்த அங்கலாய்ப்புகள் விடுதலைப் புலிகளின் பக்கத்தில் எழுந்து கொண்டிருந்தாலும் நோர்வே தனது சமாதானப் பணியில் ஏற்றுக்கொண்டவற்றை நடைமுறைப் படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த நாள்களில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவை மேற்பார்வையிட்டு வந்த ஜெனரல் Furuhovde தன் காலத்தை முடித்து வெளியேற புதியவர் அப்பொறுப்பை ஏற்றார். அவருக்கு நன்றிகள் தெரிவித்து, புதியவரை பிரபாகரன் வரவேற்றார்.

ஆனாலும் 10 மார்ச் 2003 விடுதலைப் புலிகளின் இன்னுமொரு வணிகக் கப்பல்சர்வதேசகடற்பரப்பில்பயணித்துக் கொண்டிருந்தபோது ஸ்ரீலங்காக் கடற்படையினரால் தாக்கப்பட்டு அதிலிருந்த 12 போராளிகளுடன் கப்பல் மூழ்கியது. பிரபாகரன் கோபவேசம் கொண்டு கடற் தளபதிசூசையிடம் விடுதலைப் புலிகளின் எல்லாத் தரப்புக்களையும் – முக்கியமாக கடற்புலிகளையும் எதிர்த்தாக்குதல்களுக்கு தயாராக இருக்குமாறும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இயங்கிக் கொண்டிருக்கும் விடுதலைப் போராளிகளை மீள வருமாறுன் உத்தரவுகள் பிறப்பித்தார். பேச்சுக்கள் தொடரும் வாய்ப்புகள் முழுந்து விட்டன என்று மதியுரைஞர் கணக்கிட்டாலும், நிலைமைகளும், பிரபாகரனது மனதில் இருந்த சீற்றங்களும் தணியக் காத்திருந்தார். சமாதான பேச்சு வார்த்தைகளை கைவிட்டு, யுத்த நிறுத்தத்தை முறித்து தாக்குதல்களை நடத்த மதியுரைஞர் அனுசரணை தரவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழர் மத்தியில் கட்சி .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி வேறுபாடுகள் தாண்டிப் பேரின வாதிகள் ஒன்றுபட்டு நினைவேந்தியவர் களைக் கைதுசெய்யுமாறு கொக்கரிக்கி றார்கள்.

ஆனால், நாமோ பொது நினைவேந் தல்களிற்கூட ஒன்றுபட முடியாமல் தமிழ்த் தேசியத்தை மழுங்கடித்து வருகிறோம். - என்று குறிப்பிட்டுள்ளார்.

## அதிகரித்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இன்னொரு இளைஞர் படை திரளவோ உருவாக்கப்படவோ கூடாது என்ற தந்திரச் சிந்தனையின் வெளிப்பாடே போதைப்பொருள் பாவனை என்று யாழ்ப் பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் செயலாளர் றாபின் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

சமகால அரசியல் தந்திர காய்நகர்த்தல் களை உன்னிப்பாக உற்றுநோக்கினால் சில விடயங்கள் தெரியவரும். வடக்கை யும் கிழக்கையும் நில அமைப் புத் தொடு கையிலிருந்து பிளவுபடுத்தி , இருவேறு தேசங்களாக மாற்றியமைத்தல் , பாரம் பரிய மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அழித்தலும் அவ்வி டங்களை பௌத்த மயமாக்கலுக்கு உட் படுத்தலும், நினைவேந்தல்களை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் செயற்பாடுகளைத் தடுத்தல் இப்படியான நிகழ்ச்சி நிரலின் அடுத்த கட்டம்தான் போதைப்பொருள் பாவனையும் திணிப்பும். மாணவர்களை யும் இளைஞர்களையும் போதைக்கு அடி மையாக வைத்திருந்தால் அவர்கள், அதைத் தாண்டி தமது உரிமைகள் மற் றும் சுதந்திரங்கள் தொடர்பில் சிந்திக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தின் வெளிப் பாடாகத்தான் இந்தப் போதைப்பொருள் வடக்கு - கிழக்கில் திணிக்கப்படுகின்றது.

போதைப் பொருள் வடக்கு - கிழக்குப் பகுதியூடாகக் கொண்டுவரப்படுவதும் அது இலகுவில் கிடைக்கக்கூடிய வகை யில் செய்யப்பட்டிருப்பதும் தெரியாத விடயமல்ல . கடமைக்காக மாதத்துக்கு ஒரு கைதுகள் மேற்கொள்ளப்படும் நாடக மும் நாம் அறியாத விடயமல்ல .

எமது இளைஞர்களும், பெற்றோரும் விழித்துக்கொள்ள வேண்டிய தருணமிது. இதில் தேசநலன் விரும்பிகள் , மதத் தலைவர்கள், பொது அமைப்புக்கள் போன்ற சமூக நலன் சார்ந்த அனைவருக் கும் மிகப்பெரிய பொறுப்பும் மீறமுடியாத கடமையும் உள்ளது.

போதைப்பொருள் ஒழிப்புக்காக நாம் ஒரு கூட்டமைப்பை உருவாக்கக் கடமைப்பட்டுள்ளோம். அதற்கான முதற் கட்ட நடவடிக்கைகளை யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய சமூகமாகிய நாம் முன்னெடுத்துள்ளோம். - என்றார்.

## நமது மக்கள் பற்றி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாவற்றையும் நிராக ரிக்கும் தேவை எமக்கு கிடையாது. அதேபோல் இன்று நடந்தது, தேசிய சபை கூட்டம். இது தேசிய அரசாங்கமல்ல. தேசிய அரசில் நாம் இல்லை."

- இப்படித் தமிழ் முற்போக்குக் கூட் டணித் தலைவர்

மனோ கணேசன் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நிகழ்ந்த முதலாவது தேசிய சபை கூட்டத் தில், தமிழ் முற்போக்குக் கூட்டணி சார் பில், தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர் பழனி திகாம்பரம் ஆகியோர் கலந்துக்கொண்டனர். கூட்ட நிறைவின் பின் கூட்டணித் தலைவர் மனோ கணே சன் ஊடகங்களிடம் மேலும் கூறியவை வருமாறு:-

எங்கள் மக்களின் பிரச்சினைகளை, துன்பங்களை, துயரங்களை, கண்ணீ ரைச் சொல்ல வேண்டிய இடங்களில் எல்லாம் சொல்லியே தீருவோம், குரல் கொடுத்தே தீருவோம் என்ற நிலைப்பாட் டில் நமது கட்சி இருக்கிறது. அந்த அடிப்ப டையிலேயே நானும், திகாம்பரமும் இதில் இன்று கலந்துக்கொண்டோம். ஏனெனில் எங்கள் மக்களில் குறிப்பிட்ட பிரிவினர் விளிம்பு நிலையில் வாழ்கிறார்கள். இவர் களை பற்றி கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங் களிலும், கிடைக்கும் எல்லா மேடைகளி லும் பேசா விட்டால், நாம் எதற்காக நாடா ளுமன்றம் வந்தோம்? ஆகவே அதை செய்வோம். ஆனால், விழிப்புடன் இருப் போம். சந்தர்ப்பம் கொடுத்துப் பார்ப்போம். வெறும் கதைக்களம்தான் என்றால் நாம் விலகி விடுவோம்.

மேலும் இன்று நாட்டின் நிதி உரிமை தொடர்பான நாடாளுமன்றத்துக்கு இருக் கும் உரிமையை நாம் கோரினோம். குறிப்பாக நாடாளுமன்றத்தின் நிதிக் கணக்காய்வு தொடர்பான கண்காணிப்பு குழுக்களின் தலைமை பதவிகளை எதிர ணிக்கு தரும்படி நாம் கோரினோம். அப் படி இருந்தாலே அரசின் நடவடிக்கை களை கண்காணிக்கும் வாய்ப்பு எமக்கு கிடைக்கும்.

இரண்டு வருடங்களுக்கு முன்ன மேயே, கோட்டாபய ஆட்சி செய்த போது, இந்த நிதிக்குழுக்களின் தலைமை பதவி கள் எதிரணிக்கு வேண்டும் என நாம் கோரினோம். ஆனால், அரசாங்கம் அதை எமக்கு தரவில்லை. தமது ஆள்களைப் போட்டே அதை நிரப்பினார்கள். அரசாங்க அமைச்சர்கள், எம்.பிக்கள், நாடாளுமன் றத்துக்கு வந்து நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் உண்மைக்கு புறம்பாக பொய் சொன்னார்கள். அவர்களுடன் சேர்ந்து சில அரசு அதிகாரிகளும் பொய் சொன் னார்கள். குறிப்பாக முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் பொய் பேசினார். எமக்கு வேண்டிய அளவு பணம் இருக் கிறது, டொலர் இருக்கிறது, ரூபா இருக்கி றது, ஸ்டேர்லிங் பவுண்ட் இருக்கிறது என எல்லோரும் கூட்டாகப் பொய் சொன் னார்கள்.

கடைசியில், நாடு தலைகுப்புற கவிழ்ந்த போதுதான் உண்மை வெளிப்பட்டது. கஜானா காலி என்ற உண்மை வெளியா னது. இதனால்தான் இத்தனை துன்பமும் என்பது நாம் எடுத்து கூறினோம்.

ஆகவே இந்த நிதிக் கணக்காய்வு தொடர்பான கண்காணிப்பு குழுக்களின் தலைமைப் பதவிகளை எதிரணிக்கு தரு வார்களா என பார்ப்போம். பொருளாதா ரத்தை கண்காணிக்கும் வாய்ப்பு கிடைக் கும் பட்சத்தில் இந்த தேசிய சபை சாத்தி யமாகும்.

அதேவேளை, பொருளாதார மீட்சிக்கு அப்பால் எமது மக்களின் தேசிய, சமூக, அரசியல் பிரச்சினைகளாகும் முன்வைக்க நாம் உத்தேசித்துள்ளோம். நாடாளு மன்ற வாரங்களில் ஒவ்வொரு வியாழக் கிழமையும், பிற்பகல் இந்த சபை கூடும். - என்றார்.

## பத்தில் நான்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்கொள்வதில்லை என்றும் உலக உண வுத் திட்டத்தின் அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

இலங்கையர்களின் உணவு முறை ஆபத்தான நிலையில் இருப்பதாவும், செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படவிடின் நிலைமை இன்னும் மோசமடையக்கூடும் என்று உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

அதிகரிக்கும் எரிபொருள் மற்றும் உணவுப் பண்டங்களின் விலை உண வைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப் பைக் குறைத்துள்ளன என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் உணவு விலைகள் அதிகமாக இருப்பதால், பத்தில் நான்கு குடும்பங்கள் போதிய உணவை உண்ப தில்லை என்றும், மாறுபட்ட உணவுகளை உட்கொள்வதும் குறைந்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான நிவாரணத்துக்கு 63 மில்லியன் டொலர்களை உணவுத் திட்டம் திரட்ட வேண்டியுள்ளதாகவும் அதன் பாதியளவே தற்போது கிடைத்துள்ள தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை, ஆஸ்திரேலியா, இத்தாலி, ஜப்பான், நியூசிலாந்து, நோர்வே, அமெ ரிக்கா மற்றும் சுவிட்சர்லாந்து அரசாங் கங்களிடமிருந்தும், ஐக்கிய நாடுகளின் மத்திய அவசரகால பதில் நிதியம், தனியார் துறை பங்காளிகள் மற்றும் பலதரப்பு நன்கொடையாளர்களிடமிருந்தும் மொத் தமாக 29.35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளதாகவும் உண வுத்திட்டம் தெரிவித்துள்ளது.

## 22 ஆவது திருத்தத்தின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாடாளுமன்றம் எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கூடுவதற் குத் தீர்மானித்துள்ளது.

## ஆளும், எதிரணிப் பங்கேற்புடன் .........



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்குவது தொடர்பாக நாடாளு மன்றத்தின் பொதுவான முன்னுரிமை களைத் தீர்மானிப்பது மற்றும் பொருளா தார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய மற்றும் நடுத்தர கால பொதுவான குறைந்த பட்சத்திட்டங்கள் தொடர்பான உடன்பாட்டை எட்டுவதற்காக இந்த உப குழுக்களை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய சபையின் முதலாவது கூட்டம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்தன தலைமையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபைத் தலைவர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, ஆளும் கட்சியின் பிரதான அமைப் பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல, அசங்க நவரத்ன, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், மனோ கணேசன், பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான், சிசிர ஜயக்கொடி, நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சாகர காரியவசம், அலி சப்ரி ரஹீம், ரோஹித அபேகுணவர்தன, வஜிர அபே வர்தன, அமைச்சர் டிரான் அலஸ், சிவ னேசதுரை சந்திரகாந்தன், சம்பிக்க ரண வக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கள் பலர் கலந்துகொண்டனர்.

இதில் நாடாளுமன்றச் செயலாளர் தம் மிக்க தசநாயக்கவும் இணைந்துள்ளார்.

ஒவ்வொரு நாடாளுமன்ற வாரமும் வியாழன் அன்று தேசிய சபையை கூட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இறக்குமதி மீதான ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு முன்னுரிமை அளித்து இறக்குமதி கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டன என அமைச்சர் தெரிவித்தார்.

ஓகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட வர்த்த மானி மூலம் 1465 பொருள்கள் இறக்கு மதி செய்ய தடை விதிக்கப்பட்டதாகவும், பட்டியல் அண்மையில் 708 பொருள்க ளாக தளர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த நபர்களின் கோரிக் கைகளைக் கருத்திற் கொண்டு இறக்கு மதிக் கட்டுப்பாட் டுப் பட்டியலில் இருந்து பல பொருள்கள் விடுவிக்கப்பட்டன என வும் அவர் தெரிவித்தார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



# வடக்கில் பணிகளை முழுமைப்படுத்தாத தகவல்கள் அறியும் உரிமைகள் சட்டம்!

## பேராசிரியர் ரகுராம் குற்றச்சாட்டு

தகவல் அறியும் உரிமைச் சட்டம் வடக்கு மாகாணத்தில், தனது பணிகளை முழுமைப்படுத்தவில்லை என யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கை நெறி பேராசிரியர் ரகுராம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசால் பல சட்டங்கள் கொண்டு வரப்படும். அவை அநேகமானவை மக்களுக்கு நன்மை தரும் விடயமாக இருந்தாலும், சில சட்டங்கள் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களைத் தற்போது வரை பாதிக்கிறது.

இந்த நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம், ஓரளவு மக்களுக்கு சார்பாக அமைந்துள்ளது. இந்த நிலையில் மக்களிடம் நாம் இந்தச் சட்டம் தொடர்பில் வினாவினால், சிலர் மட்டுமே கைகளை உயர்த்துவார்கள்.

இந்தச் சட்டம் எமக்கு கிடைத்த வரம். அதை நாம் உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பலருக்கு இது பற்றித் தெரியவில்லை. அதற்கு அரச இயந்திரமும் உதவி செய்ய வேண்டும்.

14 நாட்களுக்குள் தகவல் வழங்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இதற்கு அரச மட்டத்தில் ஆவணமாக தகவல்கள் சேகரிக்கப்பட்டு, கணனி மயப்படுத்தப்பட வேண்டும். இதற்கு அலுவலர்கள் தயாராக இருக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில், இணையத் தளங்கள், விளம்பர பலகைகள், வேகமாக அப்டேட் செய்யப்பட வேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் அரசுக்கு சொந்தமான பல இணையத் தளங்கள் அப்டேட் செய்யப்படுவதில்லை.

இது தவிர ஓர் அலுவலகத்தில் உள்ள ஆர்.ரி.ஐ அலுவலர்,தனது பணிக்கு மேலதிகமாக, ரதி அலுவலகராக நியமிக்கப்படுள்ளார். ஆகவே பணிச்சுமை காரணமாக தகவல்கள் வழங்குவதில் சிரமம் காணப்படுகிறது.

ஆகவே இவை சீர்செய்யப்பட வேண்டும். அப்போது தான் இந்தச் சட்டம் பயனுள்ளதாக அமையும். குறிப்பாக தனியார் காணிகள் அபகரிப்பு உள்ளிட்ட விடயங்களை அறிவதில் இழுபறி நிலை காணப்படுகிறது.

மேன் முறையீடுகள், வடக்கில் மேற்கொள்ளப்பட வேண்டும் . தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான அதிகாரங்கள் மாகாணத்துக்கு வழங்க வேண்டும். தகவலை இலகுவாக பெற்றுக்கொள்ளக் கூடிய பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் இந்தச் சட்டம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அரச அலுவலகம் தாமாகவே முன்வந்து தகவல்களை விரைவில் வழங்கக் கூடிய வகையில் நடைமுறைகள் கொண்டு வரப்படவேண்டியநிலை காணப்படுகிறது.

மேன் முறையீடுகள் , வடக்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான அதிகாரங்கள் மாகாணத்துக்கு வழங்க வேண்டும். தகவலை இலகுவாக பெற்றுக்கொள்ளக் கூடிய பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.



பாடசாலை மட்டத்தில் இந்தச் சட்டம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அரச அலுவலகம் தாமாகவே முன்வந்து தகவல்களை விரைவில் வழங்கக் கூடிய வகையில் நடைமுறைகள் கொண்டு வரப்பட வேண்டும். – என்றார்.

# தட்டினால்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவன் நல்லவன்

இதற்கு மாறாக, தமிழ் அரசியல் தலைமைகள் அறகலயா காலகட்டத்தில் தாஙகள் வளர்த்து கொண்ட சிங்கள சிவில் சமூக தலைமைகள் மூலம் தென்னிலங்கை முழுவதையும் சென்றடைய முயல வேண்டும். இதில் சிவில் சமூகம் என்பது கொழும்பில் குடிகொண்டிருக்கும் சில அறிவு ஜீவிகள் மட்டுமே சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. மாறாக, தென்னிலங்கையின் உள் பகுதிகளில் வாழும் சாதாரண மக்களை முன்னிலைப் படுத்தும் ஆங்கில அறிவு கூட இல்லாத பிரதிநிதித்துவமும் இதில் உள்ளடங்கும்.

எப்போது தென்னிலங்கை அரசியல் தலைமைகள் தமிழர்களுக்கு தொடர்ந்து அல்வா கொடுக்கும் பணியினை சிறப்பாக செய்து வருகிறதோ, எப்போது சர்வதேசமும் அதற்கு ஒத்து ஊதுகின்றதோ, அப்போது தமிழர் தரப்பிற்கு கிடைத்துள்ள ஒரே வாய்ப்பு, தென்னிலங்கை மக்கள் சார்ந்த இயக்கங்களை நேரடியாக சென்றடைவதுதான். அதற்கு முதல் படி, ஜே.வி.பி. மற்றும் முன்னிலை சேலிச கட்சியாக கூட இருக்கலாம்.

அந்த இரு கட்சியினருமே தொடர்ந்து மிதவாத தமிழ் அரசியல் தலைமைகளின் நிலைபாட்டை ஆதரித்து வந்துள்ளனர். அறகலயா போராட்டத்திற்கு பின்னர், அவர்களுக்கு தென்னிலங்கை மக்களின் ஆதரவும் பெருகி உள்ளது என்று கூறப்படுகிறது. எனவே, நான் நல்லவன் என்று தமிழன் கூறிக்கொள்வதை விட, அதனையே, தென்னிலங்கை மக்களை அடையாளப் படுத்தும் அமைப்புகள் கூறினால் அதுவே அந்த மக்களை இலகுவாக சென்றடையும் வாய்ப்பு உள்ளது.

அந்த மக்களின் ஆதரவு இருந்தால், கொழும்பு சிங்கள அரசியல் தலைமைகளுக்கு தமிழர் கட்சிகள் அழுத்தம் கொடுத்து வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளது. அது வாய்ப்பு மட்டும் தான். ஆனால், அனைத்து கதவுகளும் மூடிய பிறகு, இந்த கதவையும் தட்டி பார்ப்பதில் தவறு ஒன்றும் இல்லையே. அந்த கதவு திறக்குமா, திறக்கப்படுமா, இல்லையா என்பதும் தட்டிப் பார்த்தால் தானே தெரியும்!

# ஒலிபெருக்கியூடாகத் தொந்தரவு தேரருக்குப் பிடியாணை பிறப்பிப்பு!

கிருலப்பனை – பொல்ஹேன்கொட அலன் மெத்தினியாராம விகாரையின் பிக்குவான உடுவே தம்மாலோக்க தேரருக்கு எதிராக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருக்கின்றது.

ஒலிப்பெருக்கியின் மூலம் தொந்தரவு ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட தனி ஆள் மனுவொன்றின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காலை ஐந்து மணி முதல் ஆறு மணிவரையிலான காலப்பகுதிக்குள் ஒலிப்பெருக்கியை பயன்படுத்தியதன் காரணமாக தொந்தரவு ஏற்பட்டதாக கூறி முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட மற்றும் சுற்றாடல் நீதி மையம் உள்ளிட்ட ஆறு தரப்பினர் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் பரிசீலித்துள்ளது.

எனினும் பிரதிவாதியான உடுவே தம்மாலோக்க தேரர் மன்றில் முன்னிலையாகவில்லை.

மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 98 ஆவது பிரிவின்படி, இப்பகுதியில் ஒலி மாசு ஏற்படுவதைத் தடுக்க, ஆறு முறைப்பாட்டுதாரர்களும் இந்த தனிப்பட்ட வழக்கின் மூலம் நீதிமன்றத்தை நாடியிருந்தனர்.

அலன் மதினியாராமயவில் உள்ள ஒலிபெருக்கிகளில் இருந்து வெளிவரும் ஒலிகளை தங்கள் விருப்பத்துக்கு மாறாக கேட்க நிர்ப்பந்திக்கப்பட்டதாக ஆறு முறைப்பாடுதாரர்களான கவிந்த ஜயசிங்க, கலாநிதி கலிங்க களுபெரும, டிரென் ஆர். ஹலோக், மிலிந்த மொரகொட, கமலேஷ் ஜோன்பிள்ளை மற்றும் சுற்றாடல் நீதிக்கான நிலையம் ஆகிய 6 பேர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

விகாரையில் பல தடவைகள் தாம் செய்த முறைப்பாடுகளை அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் உள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# நாட்டின் கடும் பொருளாதார நெருக்கடியால் வாழ்வாதாரமிழந்த பேக்கரி உரிமையாளர்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விகுறியாக்கியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாடு காரணமாகவே மூலப்பொருள்களை இறக்குமதி செய்யமுடியவில்லை.

பேக்கரி உற்பத்திப் மூலப்பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் பேக்கரி உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அதன்படி பேக்கரி உற்பத்திக்குத் தேவையான கோதுமை மா, வெண்ணெய், நல்லெண்ணெய் மற்றும் பாமொயில் போன்ற மூலப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு காரணமாகவும் பேக்கரி உற்பத்திகள் பெரிதும் பாதிப்படைந்தன.

தற்போதைய சூழ்நிலையில் பேக்கரி தொழிலை முன்னெடுத்துச் செல்வதே சவாலாக மாறியுள்ளதாக பேக்கரி உரிமையாளர்களும், ஊழியர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பேக்கரிகள் மூடப்படுவதால் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வாழ்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் வாழ்வாதாரத்தை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் தொடக்கம் .............

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றில் ரணிலின் அரசுக்குப் பங்கு இருக்காது என்பது மதியுரைஞரின் அபிப் பிராயம். அவருக்கு ரணில் தீர்வை முன் னெடுப்பார் என்ற நம்பிக்கை இருந்ததால், இது, பேச்சுக்களுக்குக் குந்தகம் விளைவிக்க இராணுவத்தின் தன்னிச்சையான சதி என்றோ அல்லது ஜனாதிபதி சந்திரிகாவின் உந்துதலில் அவரது உடன்பாட்டோடு நடந்து இருக்கலாம் என்றோ எண்ணினார். யுத்த நிறுத்தத்தை முறிக்காமல் இருக்க பிரபாகரன் இணங்கினார்.

ஆனால் மதியுரைஞர் இணங்கிய சமஷ்டி அமைப்பிலான இணக்கப் பேச்சுக்கள் எங்கே போகின்றன என்பவை பிரபாகரனுக்கு மன உளைச்சல் தந்து கொண்டே இருந்தன.

ஆயினும் நடைபெற்ற கப்பலின் மூழ்கடிப்புக்கு யுத்த நிறுத்தத்தை மீறியதாக விடுதலை புலிகள் தங்களது கண்டனங்களை பதிந்து போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரிடம் விளக்கங்களும் கேட்டபோது, அவர்கள் ஸ்ரீலங்காவின் கடற்படை தங்களுக்கு உரித்தான கடல் இறைமையை அதன் சட்ட ரீதியான உரிமையில் செய்தது என்ற காரணத்தை கூறினார்கள். கடல் போக்குவரத்து பற்றிய சர்வதேச சட்ட வரைவுகளின் விதிகளுக்கு அமைய கடற்கொள்ளையர்களாகத் தாங்கள் சந்தேகித்த கப்பலை அடையாளப்படுத்தக் கேட்க அவர்கள் மறுத்ததால் தாக்கி அழிக்கப்பட்டது என்ற காரணம் தரப்பட்டது.

தங்களுக்கு சாதகமாக வந்தவர்களுடன் முரண்பட்டு, பின்னர் பங்காளிகளாக சேர்ந்து, பாதுகாக்க வேண்டும் என வந்தவர்களைத் துரத்திவிட்டு, இப்போது பங்காளியே பதம் பார்க்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகி இருக்கும் நிலைமையை சமாதான காலத்திலேயே விடுதலைப் புலிகள் எதிர்கொண்டாலும், தமக்கான தீர்வு ஒன்றை சிங்கள பேராண்மையின் தந்திரங்களுக்கு இடையில் தேடினார்கள். ஆகவே இவற்றோடு ஆறாம் சுற்றுப் பேச்சுக்கு ஆயத்தமானார்கள்.

(வளரும்....)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.09.2022இல் வெளியிடப்பெற்றது.